le

JL
Y5928-vm24,N28
N30. 2:10
220500.

2 APR 1930
KAS

உ

சிவமயம்

# வேளாள மித்திரன்.

உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

மலர் 2 } சுக்கில-௵ தை-௴
1930-௵ ஜனவரி-௴. { இதழ் 10

## [காந்தி பிள்ளைத் தமிழ்.]

அய்ய வருக, பாரத நாட்
டரசே வருக, உலகிற் கோர்

அணியே வருக, அடியேனை
ஆண்டாய் வருக, அவனி யெலாம்

உய்ய வருக, உயிர்க் கெல்லாம்
உயிரே வருக, உத்தமரின்

உணர்வே வருக, ஓராடை
உடுத்தாய் வருக, உண்மை யுரை

செய்ய வருக, பூமிக்கோர்
திலக வருக, அருளளிக்கும்

செல்வ வருக, நெறி திறம்பாச்
செம்மல் வருக, சீர்மருவ

ஐய வருக, கருணை புரி
காந்தி வருக, வருகவே

கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக, வருகவே

# திருமுருகாற்றுப்படை; உரை நடை.

(பண்டிட் ம. சி. சபாபதி முதலியார்).

(183-ம் பக்கம் தொடர்ச்சி.)

## பழமுதிர் சோலை.

சிறிய தினையரிசியை பூக்களோடு கலந்து, பிரப்பரிசியாக வைத்து, ஆட்டுக் கிடாவை யறுத்துக் கோழிக் கொடியில் முருகப் பெருமான் பொருந்தி நிற்கும்படி நிறுத்தும் ஊர்கள் தோறும் கொண்டாடப் பெற்ற தலைமை பொருந்தின விழாவின் கண்ணும், தன்னை, அன்புடையார் ஏத்த, அதற்கிணங்கித் தன்மனம் பொருந்தி வருகின்ற இடத்திலும், படிமத்தான் செய்த வெறியாடு களத்திலும், காட்டிலும், பொழிலிலும், அழகு பெற்ற ஆற்றிடைக் குறையிலும், ஆறுகளிலும், குளங்களிலும், முற்கூறிய ஊர்களன்றி வேறு பல ஊர்களிலும், முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்திகளிலும், புதிய பூக்களை யுடைய கடம்ப மரத்தடியிலும், ஊர்க்கு நடுவுள்ள எல்லா மரத்தடியிலும், அம்பலத்திலும், ஆதீண்டு குற்றியுள்ள இடத்திலும், வசித்தற்குரியன். இவ்விடங்களே யன்றிக் குறமகள், முருகனிடம், ஆற்றுப் படுத்தும் பொருட்டுச் சாந்தி செய்யப் படும் பெரிய நகரிலும் வசித்தற்குரியன்.

## குறமகள் சாந்தி செய்தல்.

பேய் முதலியன பலியை நுகராத படி, தலை ஆண் மகன் தலையாகவும், உடல் பறவையின் உடலாகவும், எழுதின கொடியைப் பார்ப்பவர்க்கு அச்சந் தோன்றத் தன் விசாலமான நகரின் கண் நாட்டுவாள். அக் கொடியில் நெய்யோடு கலந்த வெண் சிறு கடுகையும் அப்புவாள். பிறகு தான் வழிபடுதற்குரிய மந்திரத்தை, அன்னியர் கேட்கா வண்ணம், உச்சரித்து, தன் நான்கு விரல்களையு மடக்கிப் பெரு விரலை நிறுத்தி, மார்பில் வைத்து, அழகிய மலர்களைத் தூவி, வழிபடுவாள். பின் வெவ்வேறு உருவங் கொண்ட இரண்டு ஆடைகளை உள்ளொன்றும் புறம்பொன்றுமாக உடுப்பாள். சிவந்த நூலைக் கையில் காப்புக் கட்டிக் கொள்ளுவாள். காப்புக் கட்டிக் கொண்டு மிக்க வலிமையுடைய தலைக் கொண்ட ஆட்டுக் கிடாவின் உதிரத்தால் பிசைந்த தூய வெள்ளரிசியை சிறு பலியாக விட்டு, மற்று

220500



முள்ள பல பிரப்புக்களையும் வைப்பாள். வைத்த பின், சிறிய பசு மஞ்சளுடன் நறிய சந்தன முதலியவற்றைத் தெளிப்பாள். தெளித்துப் பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையையும், மற்ற மாலைகளையும், ஒரே அளவாக அறுத்து, அழகில் ஒப்பில்லாதபடி அசையத் தொங்க விடுவாள். அப்படிச் செய்த பின் நெருங்கிய மலைப் பக்கத்துள்ள நல்ல ஊர்களைப் பசிப் பிணியும், பகையும் வருத்தாது நீங்குக வென்று வாழ்த்தி நறிய தூபங் கொடுத்து அந்நிலத்திற்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடுவாள். பிறகு, மலையினின்று விழும் அருவியின் ஓசையோடு முருகன் உவக்கும் பல வாத்தியங்களும் ஒலிக்கச் செய்து, சிவந்த பூக்களையுந் தூவி, உதிரத்தால் பிசைந்த சிவந்த தினையைக்கண்டவர்களுக்கு அச்சந்தோன்றப் பரப்புவாள். அப்படிப் பரப்பிய பின் தெய்வம் இல்லை யென்பார் அஞ்சும்படியாக, முருகப் பெருமான் வரவை வேண்டி வழிபடுவாள். அப்பொழுது, அவ்வெறியாடு களம் ஆரவாரங் கொளும்படி ஏற்பனவற்றைப் பாடி, கொம்புகள் பலவற்றையும் சேர ஊதி, கொடிய மணியை அடித்து, கெடாத வலிமையை யுடைய பிணிமுகம் என்னும் பட்டத்தைக் கொண்ட யானையை வாழ்த்துவாள். அக்காலத்தில் அங்குள்ளார் தாங்கள் விரும்பின காரியங்களை விரும்பின வண்ணமே பெற்று நின்று வழிபாடு செய்வார்கள்.

இவ்வாறு சாந்தி செய்யப் படும் நகரே யன்றிப் பிற விடங்களிலும் வசித்தற்குரியன். எவ்விடமாயினும் சரி. நீ அவனை முற்படக் கண்ட பொழுது அழகுண்டாகும்படி முகம் மலர்ந்து துதிப்பாயாக. முன்னர் கையைத் தலை மேலே குவித்து வாழ்த்திப் பின்னர் திருவடி நின் தலையில் ஏறும்படி தண்டனிடுவாயாக. பிறகு, உயர்ந்த பெரிய இமய மலையுச்சியில் தருப்பை வளரப் பெற்று நீலோற்பலம் மலர்ந்திருக்கும் பசிய சுனையிடத்தில் ஐவருள் ஒருவனாகிய தீக்கடவுள் தன் அங்கையில் ஏற்கப்பெற்றவனே!(1) அருந்ததி யொழிந்த மற்றை அறுவரால் பெறப் பட்ட ஆறு வடிவங் கொண்ட செல்வனே, கல்லாலின் கீழ் விளங்கி இருந்த கடவுளின் புதல்வனே, பெரிய மலையரையன் மகளின் மகனே, வெற்றியை உலகத்திற்களிக்கும் வன துர்க்கையின் புதல்வ, பகைவர்க்குக் கூற்றுப் போன்றவனே, சிறந்த அழகைத் தன்னுள் அணிந்த சிறப்பை யுடைய காடு கிழாளின் குழந்தையே, தேவ சேனையின் தலைவனே, வளையும்

JL Y5926.VM2 ... N30.2.10

வில்லுக்குத் தலைவனே, இன்பத்திற்குரிய மாலையை யணிந்த மார்பனே, எல்லா நூல்களையும் அறியும் புலவனே, போர்த் தொழிலில் ஒருவனாய் நின்று பொருகின்ற வெற்றியையுடைய வீர, அந்தணரின் செல்வமே, சான்றோர் புகழ்ந்து சொல்லும் சொற்களின் தொகுதியே, தெய்வயானை, வள்ளி நாயகியாருக்குக் கணவ, வேலைக் கொண்டு பெருமை பொருந்திய கையையுடைய செல்வ, (2) குருகாற் பெயர் பெற்ற மலையைப் பிளந்த குறையாத வெற்றியைக் கொண்ட கிழவ, வானுலகத்தைத் தீண்டும் நெடிய மலைகளையுடைய, குறிஞ்சி நிலத்திற்குரிமை பூண்டவனே, பலரும் புகழ்ந்து சொல்லும் நல்ல சொற்களையுடைய புலவர்களுக்குள் சிங்கம் போன்றவனே, பிறர்க்குப் பெறுவதற்கரிய முறைமையையுடைய பொருளைக் கொண்ட முருகனே, வீட்டின்பத்தைப் பெற வேண்டுமென்று ஆசை கொண்டு வந்தார்க்கு அதனை நுகர்விக்கும் பெரிய புகழை ஆட்கொண்டவனே, பிறரால் இடுக்கண் நேர்ந்த காலத்து அவ்விடுக்கணைக் களைந்து, அருளைச் செய்யும் சேயே, மிக்கு நெருங்கிச் செல்கின்ற போர்களை முடித்து, கொன்று, வெல்கின்ற நின் மார்பிடத்தே பொன்னாற் செய்த பேரணிகலங்களை யணிந்த சேயே, இரந்து வந்தோரை வேண்டுவன கொடுத்துப் பாதுகாத்து ஈயாத உலுத்தர்கள் அஞ்சும்படியான பெரிய வேளே, தேவரும், முனிவரும், ஏத்தும் பெரிய திருநாமத்தையுடைய தலைவனே, போர்த் தொழிலில் அதிகரிக்கின்ற வலியால் சூரபன்மாவின் குலத்தை வேரறுத்த மதவலியென்னும் பெயரைக் கொண்டவனே, என்று யான் அறிந்து நினக்குக் கூறிய அளவில் நீ நில்லாது இன்னும் நீ யறிந்துள்ள பலவற்றையுங் கூறிப் புகழ்ந்து நின் பெருமையெல்லாவற்றையும் அளவிட்டறிதல் பல்லுயிர்களுக்கும் அரிதாகையால் நின் திருவடியைப் பெற வேண்டுமென்று நினைந்து வந்தேன். ஒப்பில்லாத மெய்ஞ் ஞானத்தை யுடையோய் என்று சொல்லி, நீ கருதிய வீடு பேற்றை விண்ணப்பம் செய். அப்படிச் செய்வதற்கு முன் வேறு வேறாகிய பல சிறிய வடிவங்களையுடைய பரிசனர்கள் சேரக் கருதி விழாவெடுத்த களத்தில் அழகு பெறத்தோன்றுவார்கள். அப்பொழுது பொறுமையை யுடைய அவருள் அறிவு முதிர்ந்த சொல்லையுடைய புலவன் ஒருவன் உம்முடைய



வளம் பொருந்திய புகழைக் கேட்டோர்க்கு, மிக்க இனிமையும், உறுதியும் உண்டாகக் கூடிய பலவற்றை, வாழ்த்தி வந்துள்ளான். ஆதலால் அவன் உம்மால் காக்கப் படத் தக்கவன் என்று கூறுவார்கள்! அப்படிக் கூறக் கேட்ட முருகன் தெய்வத் தன்மை பொருந்தி வலிமை விளங்க வானுலகளவு நீண்ட தன் உயர்ந்த வடிவத்தோடு வந்து சேர்வன். அப்பொழுது கண்டவர்களுக்கு மிகுந்த அச்சத்தைக் கொடுக்கும் தன் தெய்வத் தன்மையை உள்ளடக்கிக் கொண்டு, முன்பு உண்டான வாசம் கமழும் தெய்வத் தன்மையோடு, தன் இளைய வடிவத்தைக் காட்டி, நீ வீடு பெற நினைத்து, வந்த வரவை யாம் முன்னரே அறிவோம், அது நினக்குக் கிடைத்தல் அருமையன்று. அஞ்சுதலைப் பரிகரிப்பாயாக, என்று நின் மேல் அன்புடைய நல்ல வார்த்தைகளைப் பலகாலும் அருளிச் செய்து கருநிறத்தையுடைய கடல் சூழ்ந்த உலகத்தில் பிறரால் பெறுதற்கரிய வீட்டின்பத்தை நினக்குத் தருவதோடு நில்லாது பிறர்க்கு வீடளித்ததற்குத் தக்கவாறாய் நீ யொருவனே தோன்றும் படியும் செய்வன்.

## பழமுதிர் சோலை.

மலையின் உச்சியினின்று இழும் என்னும் ஓசை படக் குதிக்கும் அருவிகளை யுடையது. அவ்வருவிகள் பல வகைப் பட்ட துகிற் கொடிகளைப் போலத் தாம் பலவும் சேர அசைந்து, அகில் மேற் கொண்டு, பெரிய சந்தன மரத்தைத் தள்ளும். சிறு பூவையுடைய மூங்கிலினது அசைகின்ற கொம்பு கனிப்படும்படி வேரைப் பிளக்கும். வானுலகளவு வளர்ந்த பெரிய மலையிடத்தில் சூரியனைப் போலக் காணப்படும். ஈ வைத்துக் குளிர்ந்து மணம் வீசுகின்ற தேன் கூட்டை யழிக்கும். அப்படி யழித்து பல நல்ல ஈரப் பலாவின் முற்றிய சுளை தன்னிடத்தே கலக்கும்படி செய்யும். மலையுச்சியில் வளர்ந்திருக்கும் சுர புன்னையின் நறிய மலர்களை யுதிர்க்கும். கருங் குரங்கு, ஆண் குரங்கு புகரையுடைய மத்தகத்தைக் கொண்ட பெரிய பிடியானை முதலியவைகளுக்கு நடுக்க முண்டாகத் தன் நீரை வீசும். பெரிய களிற்றுயானையின் முகத்தையுடைய வெள்ளிய கொம்புகளை யுள்ளடக்கி நல்ல பொன்னும், மணியும் நிறம் விளங்கும்படி மேலே கொண்டு குதித்து பொடியான பொன்னைத் தள்ளும். வாழையின் குலைகளைத் துணியச்

செய்யும். தெங்கினது இள நீரையுடைய நல்ல குலைகளை உதிர்க்கும் மிளகுக் கொடியின் கரிய கொத்துக்களைச் சாய்க்கும். பீலியும் மடப் பமும் பொருந்திய நடையைக் கொண்ட மயில் கூட்டங்கள் வலிமை யுள்ள கோழிப் பெட்டையோடு ஒருங்கே அஞ்சியோடச் செய்யும். ஆண் பன்றியும், உள்ளே வெண்மையைக் கொண்ட கரிய பனையின் அற்பமான செறும்பைப் போன்ற கரிய மயிரையும், வளைந்த அடி யையுங் கொண்ட பெரிய கரடியும் கல் பிளக்கப் பட்ட குகையிலே சேரும். கரிய கொம்பையுடைய ஆமாவின் நல்ல எருதுகள் முழங்கும். இவ்வகையான செயல்களைச் செய்யும் அருவிகளை யுடைய பழமுதிர் சோலை என்க.

(முற்றும்.)

## வாதவூரடிகள் வரலாறு.

(A. வெங்கடாசல முதலியார்)

[156ம் பக்கத் தொடர்ச்சி.]

சிவபெருமான் மாணிக்கவாசக சுவாமிகளைப் பார்த்து, "இங்கே நீ செய்ய வேண்டிய காரியம் சிறிது உண்டு. ஆதலால், இங்கிருப் பாய்" என அடியார்களுடன் தமது திருவுரு மறைந்தருளினார். கருணா மூர்த்தியானவர், கனவில் வரும் காட்சி போல, தம்மைக் காட்டி மறைத்ததும், மாணிக்கவாசக சுவாமிகள், ஞமலிக்குத் தவிசிட்ட கலம் போல, அடியேனுக்கு நினைக்கவுங் கூடாத தமது அருமைத் திரு மேனியைக் காட்டி மறைந்தது, நனவோ அல்லது கனவோ என்றை யுற்று, பின் ஒருவாறு தேறி, எம்பெருமானே! உம்முடைய அடியாரோடு கூட்டாது அடியேனையும் அடியேன் வினையையும், இங்கிருத்தி மறைந்தீரோ? வஞ்சனை செய்கின்ற வினைக்கொள் கலமா கிய இவ்வுடலை, தீயிலினுமிடுகிலேன், மலையினுமுருண்டு மாய்கின் றிலேன், வாளாலும் குறைக்கின்றிலேன், அதுவும் நினது உடைமை யாயிற்றே. ஆதலால் அஞ்சினேன். தானேயாயினும் இவ்வுயிர் உடலை விட்டுப் பிரிகின்றிலது. ஐயனே! தேவரீரைப் பிரிந்து ஆற்றேன்? என் செய்வேன் எந்தாயோ, என்தாயோ, என்றிரங்கிப் புரண்டு அழு வாராயினார்.



"வரியனா மொரு பிறவிக் குருடன் கையில் வந்த பெருவிலை மணி போல் மழலை தேறாச், சிறியனா மொரு மழலை கையிற் கொண்ட செம் பொன்மணி வள்ளம்போற் றேவர் யார்க்கும், அறிவரியாய், சிறியேனை எளிவந்தாண்ட அருமையறியேன். துன்பத் தழுவத் தாழப்பிறிவறி யா அன்பரோடு மகன்றாய் கல்லாப் பேதையேன் குறையலது எம் பிரானாலென்ன."

தரித்திரனாகிய ஒரு பிறவிக் குருடனுக்குத் தன் கையில் கிடைத்த அதிக விலை பெற்ற மாணிக்கம் போலவும், மழலைச் சொல் நிரம்பாத ஒரு சிறு குழந்தை கையிற் கொண்ட செம்பொன் மணிக் கிண்ணம் போலவும், எத்தேவர்க்கும் கிட்டாத நீர், எளிதாக வந்து அடிமை கொண்டருளிய அருமை அறியாத அடியேனை, துன் பக்கடலிலே முழுகச் செய்து, உம்மைப் பிரிந்தறியாத அடியார்களு டனே நீங்கிப் போயினீர். ஆதலால், கல்லாத மூடனான என் குறையே யன்றி, உம்மாலே என்ன குறை.

மண்ணாதி யாறாறு மனந்துழாவித் தடுமாறிப்
புண்ணாகி யெனைக்காணா துழல்கின்றேனைப் போதவருட்
கண்ணா லைவைமுழுதுங் கரைய நோக்கி யான்யானென்
றெண்ணா வெனைத்தந்தாய் யெங்குற்றாயோ வெந்தாயே.

வானாதி யைந்துமுதல் வகுத்தவோசை முதலைந்து
மானா தியங்குமன மாதிநான்கும் வழியடைப்பத்
தேனாதி யறுசுவையுஞ் சுழியவூறுந் தெள்ளமுதம்
யானார நல்கினையால் எங்குற்றாயோ எந்தாயே.

மாசாய் மறைக்குமல வலியும் நானும் வேறின்றி
ஆசா விகாரமல மாயினேனைப் பொருட் படுத்திப்
பேசாத இன்புருவினின்னோடென்னைப் பின்வைத்த
ஈசா வெனையிங்கிட் டெங்குற்றாயோ எந்தாயே.

என்று இப்படி வாய் திறந்தாற்றினார். இளங்கன்றைப் பிரிந்த தாய் பசுவைப் போல மனம் கரைந்த நெஞ்சினராய், கோபுர வாயிலின் புறம்பே நின்ற பாண்டியன் படைஞர்களை நோக்கி, நீங்கள் முன்னே போய், குதிரைக் கூட்டங்கள் ஆடி மாதத்தில் வரு

மென்று அரசனுக்குத் தெரிவியுங்கள் என விடுத்தார். அவர்கள், பாண்டியன் முன் சென்று வணங்கி, நிகழ்ந்தவற்றைச் சொன்னார்கள். அது கேட்ட பாண்டியன் ஒன்றும் சொல்லாது குதிரையின் வரவை எதிர் நோக்கியிருந்தான். ஒள்ளிய தமிழ் வேதம் பாடுகின்ற மாணிக்கவாசக சுவாமிகள், பாண்டியன் குதிரைகளை வாங்கும்படி கொடுத்த திரவியங்களெல்லாவற்றையும், குருந்தில் வந்தாண்ட ஞானாசாரியராகிய எம்பெருமானுடைய சிறந்த பூசைக்கும், திருவிழாச் சிறப்புக்கும், ஆலயத் திருப்பணிக்கும், சிவனடியார்களுக்கும் உபயோகித்து விட்டு, அத்திருப்பெருந்துறையிலே உலகத்தாசை தீர காலங் கழித்துக் கொண்டிருந்தார். தாம் கெடு விட்ட ஆடி மாதம் சமீபித்தலும், பாண்டியன் இன்னமும் குதிரைகள் வந்தில! இது வென்ன என, திருமுகம் எழுதியனுப்பினான். மாணிக்கவாசக சுவாமிகள், அதனை முறைமையால் வாங்கி வாசித்துத் தெரிந்து கொண்டு, இனிச் செய்யுமாறென்ன என அயர்ந்து, ஆதியந்தமில்லாத ஆனந்த போகத்தைத் தந்தருளிய தமது தேசிகராகிய சிவபெருமானுடைய கோயிலைச் சார்ந்து,

"என்னாயகனே பொன்னாடரேறே யேறு கொடியுயர்த்த மன்னா
தென்னாபெருந்துறையெம் மணி வழுதியே பொருளெல்லா
நின்னாலயத்து நின்னடியாரிடத்துஞ் செலுத்து நெறியளித்தாய்
பின்னாவனுக் கென் கொண்டு பரிமாச் செலுத்தப் பெறுமாறே".

என்னாயகனே! பொன்னாடரே! இடபக் கொடியுயர்த்த மன்னா, சௌந்தர பாண்டியரே, திருப் பெருந்துறையில் வீற்றிருக்கிற என் மணியே, பாண்டியன் கொடுத்த பொருளெல்லாம் உம்முடைய ஆலயத்துக்கும், அடியாருக்கும் செலுத்தும்படி அருள் செய்தீர் இனி நான் அரசனுக்கு என்ன கொண்டு குதிரைகள் வாங்கிக் கொடுப்பது என வணங்கி, துதித்து வேண்டினார். அவர் முன்னே திருப்பெருந்துறைக் கடவுள் அசரீரி வாக்கால் குதிரை யெல்லாம் வருமென்று அரசனுக்கு ஓலை விடுதி என அருள் செய்தார். அது கேட்டு மாணிக்கவாசக சுவாமிகள், மிக மகிழ்ந்து, அப்படியே அரசனுக்குத் திருமுகம் எழுதியனுப்பினார். அந்தப் பர்சாரத்தை பாண்



டியன் வாசிக்கக் கேட்டு அடங்கா மகிழ்வுடன் குதிரையின் வரவை நோக்கியிருந்தான்.

அன்றிரவு நித்திரை செய்கின்ற பரம சிவத்தினது யதார்த்த வடிவையறிந்து, செந்தமிழ் வேதமென்கிற ஞான நூலை யோதும் நீதியையுடைய மாணிக்க வாசக சுவாமிகளுடைய கனவிலே, வெள்ளியம்பலக் கடவுள் குருந்தடியிலே வந்தாண்டருளிய ஆசாரிய வடிவங் கொண்டெழுந்தருளி வந்து, "அரசனுடைய மனதைக் கவரத் தக்க குதிரைகளை நாம் கொண்டு வருகின்றோம். இன்று நீ முன்னே செல்லுதி" என்று அருளிச் செய்தார். உடனே மாணிக்கவாசக சுவாமிகள், துயில் விட்டெழுந்து, தேவர்களுக்கும் கனவில் காண்டற்கரிய கருணை வடிவு அடியேனுக்குக் கனவிலும் நனவிலும் எளிதாயிற்றே" என நினைத்துக் கொண்டிருக்கச் சூரியோதயமாயிற்று. உடனே மாணிக்கவாசகப் பிரான் திருப் பெருந்துறையிலிருக்கும் கடவுளுடைய பாதங்களை வணங்கி, இனிப் பிறப்பிலழுந்தாதவராய், வழிக்குந் துணையாயிருக்கின்ற கடவுளுடைய பஞ்சாக்ஷரமும் உச்சரித்துக் கொண்டு, மதுராபுரிக்குப் போய், பாண்டியனைக் கண்டு, தாம் செய்ய வேண்டிய முறைமைப்படி, அவனுக்கு வழிபாடு செய்து, முன்னே நின்றார். பாண்டியராசன், அவர் முகத்தை நோக்கி, "எவ்வளவு பொன் கொண்டு போய் எவ்வளவு குதிரை வாங்கினீர்?" என்று கேட்டான். மாணிக்கவாசக சுவாமிகள் "மகாராஜனே, குதிரை வாங்கும்படி நான் கொண்டு போன பொருளுமளவில்லை, வாங்கின குதிரைகளு மளவில்லை; அக் குதிரைகள் பின்னே வருகின்றன; கண்டருளுதி, துரங்கபதி என்னும் நாமம் பெறுதி" என்றார். தென்னவன் பல வரிசைகள் செய்து, அவரை மனைக்கு விடுத்தனன்.

விரிந்த நூலில் வல்லவராகிய மாணிக்கவாசக சுவாமிகள், பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, சித்தி விநாயகரைத் தொழுது, அங்கயற் கண்ணம்மையுடனே விளங்குகின்ற சொக்கலிங்கப் பெருமானைத் தொழுது, மனம், வாக்கு, காயம் மூன்றும் அன்பு மயமாய்,

"மன்னே யென்னையாட் கொண்ட மணியே வெள்ளி மன்றாடு
மன்னே யடியேன் வேண்டிய வாறரசனீந்த நிதியெல்லா
முன்னே சொண்டேன் பணி கொண்டாய் முனியாதரசனனி மகிழ
வென்னே புரவி வரும் வண்ணமென்று வேண்டி நின்றிடலும்",

"தலைவரே, அடியேனை ஆட்கொண்டருளிய அருமையே, வெள்ளியம்பலத்திலே திருநிருத்தஞ் செய்யும் கடவுளே, அரசன் தந்த பொருள்களை யெல்லாம், அடியேன் வேண்டிக் கொண்டபடி நீர் ஏற்றுக் கொண்டு, அடியேனையும் பணிகொண்டீரே. அரசன் மூனிவுறாது மனமகிழ, குதிரைகள் வரும் வண்ணம் எங்ஙனம்?" என வேண்டி நின்றார். அப்பொழுது சிவ பெருமானுடைய திருவாக்கால், "மெய்யன்புடையானே, அஞ்சற்க. நீ விரும்பியபடி சூரியன் தேரை இழுக்கும் குதிரைகள் போலும் குதிரைகளைக் கொண்டு வருகின்றோம்" என ஆகாயத்தில் அசரீரியாக உண்டாகக் கேட்டு, மாணிக்கவாசக சுவாமிகள், சிவ பெருமானுடைய கருணையைப் போற்றி, தமது மனைக்குச் சென்றார்.

பரம சிவனைக் கருத்திலே வைத்திருக்கின்ற மாணிக்கவாசக சுவாமிகளுடைய, சுற்றத்தார்களும் நட்பினரும் முதலாயினோர் வந்து சூழ்ந்து, இடி முழக்கம் போலப் பல புத்திகளைச் சொல்வார்கள்; "மந்திரியுரிமை பூண்டு மன்னர் கருமஞ் செய்வது அந்தணர்க்கு தருமமன்று. மன்னர்களுக்குறிய மந்திரியாக இருந்தாலும் அவர்களுக்கு இசைந்த காரியங்களைச் செய்வதே தகுதியென்று மறுநூலில் வல்லோர் சாற்றுவார்கள். அரசியலும், அமைச்சியலும் தெரிந்த உமக்கு நாங்கள் சொல்வதென்ன! நீர் செய்வதொன்றும் நன்றானதாயிருக்கவில்லை. இன்றைக்கு குதிரைகள் வரும் என்று அரசனுக்கு வரையறுத்துச் சொன்னீர். ஐயரே, சொன்னபடியே வர வேண்டும் அல்லவோ? நாளைக்கு அவ்வரசனுக்கு என்ன சொல்ல வல்லீர். நீர் அரசனிடத்து நடந்து கொள்ளும் விதத்தினாலே உம்முடைய கிளைஞர், நட்பினர் முதலானவர்களைக் காக்க வேண்டுமென்னும் குறிப்பு உமக்கில்லை போலும். உம்முடைய செய்கை உமக்கே மிக நன்றாயிருக்கின்றது" என்று இடித்துரைத்தார்கள்.

அவற்றை, சற்றாயினும் மனத்தளர்ச்சி யில்லாத தன்மையையுடையவரான மாணிக்க வாசகப் பிரான், கேட்டு,

சுற்றமுந்தொடர்பு நீத்தே துன்பமு மின்ப மற்றேம்
வெற்றுடன் மானந்தீர்த்தேம் வெறுக்கைமேல் வெறுக்கை [illegible]

செற்றமுஞ் செருக்குங் காய்ந்தேந் தீவினை பிர[illegible],
சுற்றைவார் சடையான் கோலங் காட்டி யாட் [illegible]றே;



தந்தை தாய் குரவனாசான் சங்கர னிராசை பெண்டிர்
மைந்தர் பல்லுயிருஞ் சுற்ற மாசிலா வீசனன்பர்
அந்தமில் பிறவியேழு மடுபகை யென்பதோர்ந்தே
மெந்தை யார்கருணை காட்டி யெம்மை யாட் கொண்ட வன்றே;

ஊரெலா மட்ட சோறு நம்மதேயுவரி சூழ்ந்த
பாரெலாம் பாயலுண்ணற் கோவணம் பரிக்குமாடை
சீரெலாஞ் சிறந்த சாந்தந்தெய்வ நீறணி பூண் கண்டி
நீரெல்லாஞ் சுமந்த வேணி நிருத்தனாட் கொண்ட வன்றே

இறக்கினு மின்றே யிறக்குக; வென்று மிருக்கினு
மிருக்குக வேந்த, னொறுக்கினு மொறுக்க; வுவகையு
முடனே யூட்டினு மூட்டுக; வானிற், சிறக்கினுஞ்
சிறக்க; கொடிய நிரகஞ் சேரினுஞ் சேருக; சிவனை,
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தான்
மாற்றுவார் யாரென மறுத்தார்.

சடாபாரத்தையுடைய சிவபெருமான் ஞானாசாரிய வேடங் காட்டி நம்மை அடிமை கொண்ட வன்றே, சுற்றத்தையும், அது பற்றி வரும் தொடர்புகளையும், நீங்கினோம்; துன்பமும், இன்பமும், அற்றோம்; தேகாபிமானம் தீர்த்தோம்; திரவியத்தை வெறுத்தோம்; கோபத்தையும், கெருவத்தையும், கெடுத்தோம்; நல்வினை தீவினை முதலானவைகளையும் நீங்கினோம்; எமனுக்குத் தந்தையும், தாயும், குருவும், ஆசாரியரும் சிவபெருமான்; பெண்டிர் வெறுப்பு, புதல்வர்கள் பல சீவராசிகள்; சுற்றம் சிவனடியார்; பகை எழு பிறவிகள், ஊரிலெல்லாஞ் சமைத்த சோறு நம்முடையதே; கடல் சூழ்ந்த உலகமெல்லாம் நமக்குப் படுக்கை; நைந்த கோவணம் நாம் தரிக்கும் வஸ்திரம்; நமக்குச் சந்தனம் விபூதி; ஆபரணம் உருத்திராக்ஷம்; நீரெல்லாம் சுமந்த வேணி நிருத்தனாட் கொண்டவன்றே எண்ணினோம். நாம் இன்றைக்கே இறக்கினும் இறக்குக; என்றும் இருக்கினும் இருக்குக; அரசன் தண்டிக்கினும் தண்டிக்குக; அவன் உடனே மகிழ்விக்கினும் மகிழ்விக்குக; சுவர்க்கத்தில் சிறக்கினுஞ் சிறக்க; கொடுமையாகிய அக்கினி நரகம் சேரினும் சேர்க; பரம சிவனை

மறக்க மாட்டோம்? பழவினைப் பயன் அனுபவிக்க வேண்டி வந்தால் அதைத் தவிர்க்க வல்லவர் யாவர்" என்று சுற்றத்தார் முதலானோர் சொல்லை மறுத்து வார்த்தையாடிக் கொண்டிருந்தார்.

[தொடரும்.]

# நச்சுப் பொய்கை.

## I

## காப்பி

[டாக்டர் டி. எஸ். பி. ராஜு.]

### பிறப்பும் பரப்பும்.

(முன் தொடர்ச்சி)

"இது நித்திரா பங்கத்தை உண்டாக்குவது"

Sir Witlew Pc. Treatment.

என அறிஞர் பலர் இத்தனிப் பொருட்களின் தீக்குணத்தை விரித்துச் சொல்லுகின்றனர். அன்னார் நூல்களும் பல; அவைத்தையும் தொகுத்தலியலா. தனிப் பொருட்களின் தன்மையே யீதாயின், அவைதிரண்ட பானத்தின் கொடுமையை கூற வேண்டுங் கொல்?

### பானத்தின் பொதுக் கொடுமை.

காப்பி, தேயிலைப் பானமும், ரக்த அழுத்தமும்.

வழக்கமாய் நாடோறு முட்கொள்ள எப்பருவத்தினருக்கும் அனுமதிக்கலாகாத இப்பானங்கள், சிறப்பாக வயதேற்ற முடையார்க்கு பெருந் தீங்கிழைக்கிறது, என ஆயோவா நாட்டு மருத்துவக் கழக-சஞ்சிகை கூறுகிறது. வயதின் முதிர்ச்சியோடு நரம்பு அழற்சியும் மிகுகிறது. உடலும் இவ் வூக்கங்களுக்கு எளிதில் வயப்படுகிறது. இருதயத்தை ஊக்கு மிதன் குணத்தால் ரக்தக் கொதிப்பும் உண்டாகிறது. இளைஞரின் ரத்தக் குழாய்களை விட, முதுமையால் தளர்ந்தும் கடினமாயுமுள்ள மேனிகள், இரத்த ஈட்டத்திற் கிசைந்தவாறு, விரிந்திடங் கொடுக்க முடிவதில்லை. இதனால் ரக்த அழுத்தம் அதிகரிக்கிறது. ஆகையால், முதியோர், அவசியம் இப் பானங்களை விலக்க வேண்டும்; விரும்பத் தகாத ஊக்கிகள் என்பதால் மட்டுமன்று; ரக்த அழுத்தத்தைக் கிளர்த்தும் வெம்மையது என்பதாலும்," காப்பி, களைப்பை வளர்க்கிறது.



காபீன், களைப்பு உணர்ச்சியையே அழிக்கிறது. ஆனால் இந் நச்சுப் பான விளம்பரங்கள் ஒக்கு உரைப்பது போன்று "ஐந்து நிமிடங்களில் ஆறுதல் தருகிறது" இல்லை. உழைப்பின் பயனால் இயற்கையாக ஏற்படும் சக்தி நஷ்டத்திற்கு எவ்வகையாலும் இது ஈடு கொடுப்பதில்லை. இதன் உறவில்லாப் போழ்தைக் காட்டிலும், காப்பியின் ஆதிக்கத்திலுள்ள சமயங்களில் செய்யும் வேலை சுலபமாகத் தோன்றினும், விரைவில் முன்னிலும் கொடுமையான தளர்ச்சியே பின் தொடர்கிறது என்ற உண்மையை, உணவுப் பொருள் ஆராய்ச்சியிற் சிறந்த ஸ்மித் என்பார் நிறுவிக் காட்டியுள்ளார்."

Dr. Edward Smith.

### காப்பியின் ஏமாற்றம்.

காப்பியை உட்கொண்டதும், சிரம பரிகாரம் பெற்றதாகத் தோன்றும் உணர்ச்சி, ஓர் பெரும் பித்தலாட்டம். அவயவங்களின் அயர்வைப் புறத்தெடுத்துச் சுட்டும் களைப்பை இது அறவே நீக்கி விட்டதாயும், விபத்தேதுமின்றி மீண்டும் உழைப்பைப் புகுக்கலாமெனவு மாய நினைவை இவ்வயிர்தபானி பெறுகிறான். உண்மையை நாடின், களைப்பு உணர்ச்சியை மேல் எழவிடாமல் நசுக்கி விடுவதே இப்பானங்களைத் தொடரும் பெரும் ஆபத்தான கொடுமை. "செயலாற் அவயவங்கள் சோர்வுற்றன; நஷ்டத்திற்கு ஈடுதர போதிய அமைதிக் காலம் வழங்க வேண்டும்" என நமக்கு அபாய அறிவிப்பு உணர்த்துவதாகிய நரம்பு மர்மங்களை இது செயலற்று விறைக்கச் செய்கிறதே யொழிய களைப்பை நீக்குவதில்லை.'

"Good Health".

"டீ" யினுங் கொடியது காப்பி. இதிலுள்ள காபீன் என்னு மிதன் சத்து ஓர் கடும் விஷமாகும். இருதய நடையைத் தளர்த்துகிறது. தேயிலையைக் காட்டிலும் காப்பியில் 3 மடங்கு வாலடைல் தைலம் அதிகமாக உண்டு. காப்பீனை விட கொடியது இத் தைலம்; எனவே தேத் தண்ணீரை விட காப்பிப் பானம் தீங்கிழைப்பது.

"நுண்ணிய கருவிகள் பலவமைந்த தேக யந்திரத்தின் செயலை இப்பானங்கள் தேக்குகின்றன," என்பது மேனாட்டு வைத்திய சாஸ்திர பெரும் நிபுணரான சர் வில்லியம் ஆஸ்லரின் தேர்ந்த முடிபு.

இவ்வாறுய அறிஞரின் உரைகளைத் தொகுத்துச் சொல்வதாயின், கட்டுரை மிக நீளும். போதிய சிலவற்றைத் தந்துள்ளோம். மற்றவற்றை சுருக்குவதெனில், இக்காப்பி, துடிப்பு, விரிவு, தளர்ச்சியாதிய இருதய நோய்கள், இரத்தக் கொதிப்பு, விரிவு, தளர்ச்சி, வறட்சியாகிய ரக்தநாள ரோகங்கள், இந்திரியக் கலக்கம், சிரோ வேதனை, அழற்சி, விறைப்பு, தூக்கமின்மை, நடுக்கம், முடக்கு வாதம், மனக் கலக்க மிவைகள் வழியாய் நரம்பு வியாதிகள், சர்ம வறட்சி, விருக்க மூத்திர மார்க்க வீக்கம் முதலிய பிணித் திரள் அனைத்தையும் ஒருசேரத் தோற்றுவிக்கிறதென்பது, வெள்ளிடைமலை. காப்பின் சத்து, ஆகார பக்குவத்திற்கு வேண்டிய கசிவு நீர்களைப் பெருக்கி வீணாக்குகிறது; தொடரும் டானின் துவர்ப்பு சத்தும், பானவெம்மையும் நா, வாய், அன்னவாஹினிகளின் பசையைப் போக்கி, தீய்த்து விடுவதால் நாவறட்சி, ருசியின்மை விளைக்கிறது. (காப்பி அருந்தியதும் தோன்றும் வறட்சிக்கும் நாவின் மறப்பிற்கு மிதுவே காரணம்). பிறகு ஆமாசத்தினுட் புகுந்து, ஜீரணத்திற்கு அதி முக்கியமான பாசக பித்த நீர்ச்சினைகளை வேக வைத்து, கசிவை தடுத்துக் குவிந்து விரியும் அப் பையின் செயலை பாழ் படுத்துகிறது. (நீண்டநாள் காப்பிப் பழக்க முடையார் போதிய அளவு ஆகாரமுட் கொள்ள இயலாமைக்கு காரணம், இதுதான்). உண்டி அருகின், உடல் வளத்தைக் கூறுவானேன்? எஞ்சிய இச்சத்துக்கள், பக்குவாசயத்தைச் சார்ந்து, அவற்றையும் பாழ் படுத்தி, 'காலிக் ஆஸிட்'டாக பரிணமித்து, குடல்களை வறட்டி, மலபந்தத்தை உண்டாக்குகிறது. உடல் நலிவோடு மலத்தேக்கமும் உறவு பெறின் நோய்த் திரளுக்கு தனித்த அழைப்பு வேண்டுங் கொல்?

தேகத்திற்கு நாசமேயன்றி, பொருளாதாரத் துறையினை நோக்கினும், இக்காப்பி, நஷ்டமே தருகிறது. எங்ஙனமெனின், மலைக்காடுகளை யெல்லா மழித்து, மழைக்கு வானத்தை நோக்கி விட்ட வெள்ளையரே பெரும்பாலு மிதனை விளக்குவர் ஆவர். வர்த்தகமாகக் கொண்டாரு மவரே. இதனால், மிகச் சுருங்கிய வருவாயுடைய இந்தியரின் சிறு பொருளும் அன்னாரைச் சார்ந்து கடல் தாண்டுகிறது. ஜீவகா[illegible] ததும்பும் நம் சமயப் பெருமையைக் கருதினும் இக்குடி நமக்குப் பொருந்தாதது. வறுமையாலும் வஞ்சனை வலிக்கப் பெற்று, இதன் விளை கலன்களுக் கோடி, உண்டி உடைகளின்றி உலர்ந்து, இன்னலுக்கோரிலக்காகி, மலேசுர, நச்சு நீர்களால் உதர பிலீகங்கள் வீங்கி, கைகால் சூம்பிப் போகச் செய்வதும், அப் பாரத மக்கள் தம் பொன்னுடல்களின் மீதெழுந்து, அவர்தம் மனைவி மக்கள் கண்ணீர்ப் பெருக்கால் கொழுந்து விட்டு தழைப்பதுமான இக்காப்பிக்கு இந்திய மக்களாய நாமே ஆக்கந் தேடுதல் அறமாகுங் கொல்? இதுவே அறிவுடைமை! அருள்! பிறர் துயரங் கண்டு கரையும் பெற்றியரன்றோ நாம்? அறஞ் செய்யானாயினு மொருவன் மறஞ் செய்யப் பிறரை ஏவாமை இனிதன்றோ? மறை முகமாக உயிர்க் கொலையை ஊக்க லெத்தகைய பேதமை? தற்கொலையும் எத்தகைய கொடியது? இவற்றை யெல்லாம் நினைந்து நினைந்து உள்ளங் கரைந்தன்றோ நங்காந்தி அடிகள் செல்லு மிடந்தோறும் சிறப்பாக வாலிபரை விளித்து 'உடம்பில் ஏன் விஷத்தை ஓயாமல் ஏற்றிக் கொண்டே போகிறீர்?' என வினவுகிறார். வயதேற்றத்தால் செவிடாகி, எரிவாய் புக நிற்கும் பெரியார்க்கு இச்செம்மொழிகளைப் பற்றி கவலையில்லை; அவருக்கு ஓதியும் பயனின்று. ஆனால் நாடாள வளரும் நங்காளையாரேனும் இவற்றைச் சற்று சிந்தியாரோ? விட்டொழியாரோ?



இல்லறப் பெருமாளிகைக் குற்ற தூண்களாய் நின்று, மக்களின் நல்லொழுக்க அமைதி ஆசிரியர்களாய்த் திகழ வேண்டிய பெண்டிரே, இக் குடிக் கின்று அதி தேவதைகளாய் மாறி, காப்பியுங் கையுமா யிருப்பது பல குடும்பங்களில் நாம் பார்க்க நேர்ந்த தொன்று. எதிர்கால சந்ததியரை நன்று வளர்க்கும் பெருங் கடனும் ஆற்றலும், வாய்ந்த பெண்மணிகள்—அன்னையர்—தம் வயிற்றுதிக்கும் அருங் குழவியரின் நலங் கருதியேனும் இத்தீக்குடியை விட்டொழியாரோ? பிறர்க்கும் நன்மதி புகட்டாரோ? தோற்றத்தில் எதனையுங் களைதல் மிக எளிது; சிறந்தது. இத்துறையில் ஈடு பட்டுழைக்க விரும்புபவர்க்குப் போதிய மன உறுதியை ஈசன் அருள்வானாக.

220800

# ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை.

## திப்பு சுல்தானின் ஆட்சியில் ஓர் உதாரணம்.

"யங் இந்தியா" பத்திரிகையில், ஸ்ரீமான் வி. எஸ். ஜி. பின் வருமாறு எழுதுகிறார் :—

மைசூர் இராஜ்யத்தை யாண்ட பதேஹ் திப்பு சுல்தான் அவர்கள், தமது ஹிந்து பிரஜைகளை வருத்தினாரென்றும், பலாத்காரத்தினால், பலரை முஸ்லிமாக்கினார் என்றும் அந்நிய நாட்டுச் சரித்திரக்காரர்கள் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். அதற்கு மாறாக, அவர், ஹிந்து பிரஜைகளிடத்தில், நட்பு முறையில், சம்பந்தம் வைத்திருந்தார் என்பதற்குப் பல ஆதாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவருடைய பிரதம மந்திரியாயிருந்தவர் ஒரு ஹிந்து. இவர், சுதந்திர வீரரான தமது எஜமானனை, சத்துருக்களுக்குக் காட்டிக் கொடுத்து விட்டார் என்று கூற வெட்கமாயிருக்கிறது. சிருங்கேரி மடத்து ஸ்ரீ சங்கராச்சாரியாருக்குத் திப்பு சுல்தான் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார். இவைகளில் சுமார் முப்பது கடிதங்கள் வரை, மைசூர் அரசாங்கத்து சிலாசாஸன இலாகாதார் வசம் இருக்கின்றன. திப்பு சுல்தான், யதேச்சாதிகார மன்னராயிருந்த போதிலும், அவருடைய நாட்டிலுள்ள ஹிந்து வியாபாரிகள், அராபிய மொழியிலேயே கணக்குகள் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தவில்லை. தவிர, அவர், தாமே, தேச பாஷையாகிய கன்னடத்திலேயே, பலருக்கும், பல கடிதங்களை, எழுதுவித்தும் வந்தார். திப்பு சுல்தான், ஸ்ரீ சங்கராச்சாரியாருக்கு 1793-ம் வருஷத்தில் எழுதிய ஒரு கடிதம் வருமாறு :—

'ஸ்ரீமத் பரமஹம்ஸாதி யதோக்த விருதுகளையுடைய சிருங்கேரி ஸ்ரீ சச்சிதானந்த பாரதி ஸ்வாமிகளுக்கு, திப்பு சுல்தான் பாதுஷா, சலாம். தாங்கள் எழுதியனுப்பிய கடிதத்தினின்று சகல அபிப்பிராயங்களும் தெரிய வந்தன. தாங்கள் ஜகத்குரு. சர்வ லோகத்துக்கும் க்ஷேமம் உண்டாக வேண்டுமென்றும், ஜனங்கள் ஸ்வஸ்தமாக இருக்க வேண்டுமென்றும் தபஸ் செய்து கொண்டே இருக்கிறீர்கள். [illegible]மயிருக்க வேண்டுமென்றும், அதிக அபி[illegible] யடைய வேண்டுமென்றும், திரிகால தபஸாய், ஈசுவரப்



பிரார்த்தனையும் செய்து கொண்டிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தம்மைப் போன்ற பெரியவர்கள், எந்த தேசத்தில் இருக்கிறார்களோ, அந்த தேசத்தில், மழை, விளைவு எல்லாம் உண்டாகி, சுபிட்சமாக இருக்கும். ஆகலினால், தாங்கள் வேறிடத்தில் அதிக நாட்கள் ஏன் இருக்க வேண்டும்? தாங்கள் போன காரியங்களை சீக்கிரத்தில் முடித்துக் கொண்டு இந்த ஸ்தலத்திற்கு (மைசூருக்கு) விஜயஞ் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பரிதாபி வருஷம் தை மாதம் 14-ந் தேதி, சுப்பராவ் முன்ஷி கையெழுத்து".

திப்பு சுல்தான், ஹிந்து கோயில்களுக்குப் பல விதமான நன்கொடைகளை அளித்திருக்கிறார். ஸ்ரீ வெங்கடரமண சுவாமி, சீநிவாசப் பெருமாள், அரங்கநாதர் முதலிய கோயில்களுக்கு, அதிக உதவிகளைச் செய்திருக்கிறார். ஸ்ரீ ரங்கநாதருடைய கோயில், திப்பு சுல்தானின் அரண்மனைக்குச் சமீபத்திலேயே இருந்தது. ஹிந்து கோயில்களிலிருந்து எழுந்திருக்கும் மணியோசை, இவருடைய தொழுகைக்குப் பங்கம் உண்டாக்கவில்லை. திப்பு சுல்தான், சுதந்திரத்திற்காகவே போராடினார். சத்துருக்களிடத்தில் சரணமடைய வேண்டுமென்று அவருக்குக் கூறப் பட்ட யோசனையை, அவர் நிராகரித்து விட்டார். அவர் கையில் வாளாயுதத்தைத் தாங்கிக் கொண்டே இறந்து கிடந்தார். "இருநூறு ஆண்டுகள் நாய் போல் வாழ்வதை விட, இரண்டு நாளேனும் சிங்கத்தைப் போல் வாழ்வது சிறந்தது," என்று திப்பு சுல்தான் அடிக்கடி கூறுவதை நாம் நினைவு படுத்திக் கொள்வோமாக.

# யாக உண்மை.

எவ்வுயிரும் பராபரன் தன் சன்னதியாகும்;
இலங்கும் உயிர், உடலனைத்தும் ஈசன் கோயில்;
எவ்வுயிரும் நம் உயிர் போல் என்றும் நோக்கி
இரங்காது கொன்று அருந்தும் இயல்பினோரை,
வவ்வி யமதூதரும் தண்டஞ் செய்து,
வல் இரும்பை உருக்கி யவர் வாயில் வார்த்து,
வெவ்விய தீ எழு நரகில் வீழ்த்தி, மாறா
வேதனை செய்திடுவரென விளம்பும் நூலே.

"எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவனென்று அவ்வுயிர்க்கும் அன்பாய் இரு,"

என்பன போன்ற ஜீவகாருண்யம் கனிந்தொழுகும் அதியுன்னத தத்துவ தமுக்கடித்து, காணும் பொருட்களி லெல்லாம், கடவுள், சர்வாந்தர்யாமியாய், நிறைந்திருக்கிறான்; ஆதலின், எவ்வுயிர்க்கும் தீங்கு நினைக்கலாகாது; பிற ஜெந்துக்களைக் கொன்று, அவற்றின் ஊனைச் சுவைப்போர்க்கு, ரௌரவாதி நரகம் சம்பவிக்கும் என வைதீகப் புனிதர்கள் உயிர்க்கொலையைத் தகைக்கிறார்கள். ஆனால்இவர்களே பிறிதோரிடத்தில், "கனவிலும் ஆகாது மகத்தினி லன்றி ஊன் தின்னல்" என்பன போன்ற சில வாக்கியங்களை தமக்காதாரமாகக் கொண்டு, யாகத்தில் பசு, குதிரை, என்? மனிதனையுங் கூடக் கொல்லலாம். அவற்றின் ஊனைச் சுவைக்கலாம்—அது புண்யமேயன்றி பாவமாகாது. மேலும், "யாகத்தில் கொல்லப் படும் ஜெந்துவும்—அவ்யாகத்தைச் செய்பவனும்,—செய்விப்பவனும்,—மோக்ஷத்தை யடைகிறார்கள்" என்று இதனை ஊக்குகிறார்கள். அண்மையிலும் ஓரிரண்டு இடங்களில், இப்புனிதக் கொலையை, புதுப்பித்தும் உள்ளார்களாம். இவர்கள் கூறிய சொற்களே முன்னுக்குப் பின் நேர்முகமாக முரணுறுவதையும் காண்கிலர். எவரேனு மதனைச் சுட்டி வினவினாலோ, இப் 'படுகொலையின்' புனிதத் தன்மையைச் சித்தாந்தப் படுத்த, கச்சை யிறுக்கி எழுகிறார்கள். தம்மறக் கூற்றினுக்கு ஆதாரமாக, அறக்கடவுளின் மொழியான வேதங்களிலிருந்து, சில சுலோகங்களையும், அத்தாக்ஷி யெனக் காட்டுகின்றனர். சாதாரண அறிவிற்குமொவ்வா இக் கூற்றுகளால் ஒருவன், அமைதியுறாவிடின், 'நாஸ்திகன்' என அவனைத் தூஷித்துச் சாபங் கொடுக்கவும் முனைகிறார்கள். சுருக்கின், கடவுள் பெயரால் கழுத்தறுக்கும் இக்கொடுஞ் செய்கையே, மேற்கு நாடுகளிலும், காலக்கிரமத்தில் பரவி, தான் செய்த பாவ நிவர்த்திக்காக, ஒருவன் குற்ற மற்றகாளையொன்றைக் கொணர்ந்து, "கர்த்தருடைய சந்நிதியில் அதைக் கொல்லக் கடவன். அப்பொழுது, ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள், அதன் ரத்தத்தை யெடுத்து, ஆசரிப்புக் கூடார வாசலில் இருக்கிற பலி பீடத்தின் மேல், சுற்றிலும் தெளிக்கக் கடவார்கள். பின்பு அவன், அந்தச் சர்வாங்க தகன பலி-



யைச் சந்து சந்தாகத் துண்டிக்கக் கடவன்." அப்பொழுது, ஆசாரியனான ஆரோனின் குமாரர், பலிபீடத்தின் மேல் அக்கினியைப் போட்டு, அக்கினியின் மேல், கட்டைகளை அடுக்கி, அதன் மேல் (ஜந்துவின்) துண்டங்களையும், தலையையும், கொழுப்பையும் அடுக்கி வைக்கக் கடவார்கள். அதன் குடல்களையும், தொடைகளையும் அவன், தண்ணீரினால் கழுவுவானாக. அவைகளை யெல்லாம் ஆசாரியன் பலி பீடத்தின்மேல் சர்வாங்க தகன பலியாக தகனிக்கக் கடவன். இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகன பலி. அத் 1. சு 5-10

"தானாய் செத்த மிருகத்தின் கொழுப்பையும், பீறுண்ட மிருகத்தின் கொழுப்பையும், பலவித வேலைகளுக்கு வழங்கலாம். ஆனால் நீங்கள் அதனை ஒரு போதும் புசிக்கலாகாது. கர்த்தருக்குத் தகன பலியாக செலுத்தப் படும் மிருகத்தின் கொழுப்பை புசிக்கின்ற எந்த ஆத்துமாவும் தன் ஜனங்களில் இராத படி அறுப்புண்டு போவான்." 24—25.

"கர்த்தருக்குத் தகன பலியாக படைப்பவைகளை. அவன் கைகளே கொண்டு வர வேண்டும். ஆசாரியன் கொழுப்பை பலி பீடத்தின் மேல் தகனிக்கவேண்டும. மார்க்கண்டமோ ஆரோனையும் அவன் குமாரனையும் சேரும்." அத் II—30—32.

—"மோசே எழுதிய 3-ம் ஆகமமாகிய லேவிராயாகமம் (இந்நூலில் முதல் 11 அதிகாரங்களைப் படிக்க).

"தானாக இறந்த பிராணிகள்—ரத்தம்—பன்றி மாம்சம்—ஆண்டவன் பெயரால் கொல்லப் படாத ஜந்துக்கள்-இவற்றைக் கண்டிப்பாய் புசிக்கலாகாது." குரான்.

"இயற்கை மரணமடைந்தவை-ரத்தம், பன்றி மாமிசம்—ஆண்டவன் பெயராலன்றி பிற பெயரால் கொல்லப்பட்டவை—சுருக்கிட்டோ, அடியுண்டோ, விழுந்தோ, மாம்ச பக்ஷிணிகளான பிற ஜெந்துக்களால் தீண்டப் பட்டோ, உள்ள மாமிசத்தை, அவசியம் விலக்க வேண்டும்." Ch. V. ப. 4.

என்ற பிற மதப் பகுதிகளுக்கும் இடந்தந்தனவோ என்று ஐயுற வேண்டி யிருக்கிறது. கடவுட் பெயரால் கொலை செய்ய

லாம்——யாகஞ் செய்ய வேண்டு மெனும் இவ்வாஸ்திக மணிகள், அவன் பெயரை உச்சரித்தே கொல்லும் பிற மதத்தவரைத் தூற்றல் எதற்கோ? இக்கற்றோரிடை நிலவிய யாகமே, நாளடைவில் கல்லாரின் ஆடு வெட்டும் பொங்கலாக பரிணமித்ததோ, யாதோ? இவர்களும், தமது கடவுளராகிய காளி, நாட்டுராயன் முதலியவரின் பெயரைக் கூடித்தானே, ஆடு கோழிகளைப் பலியிடுகின்றனர். பிறகேன் இவரை மாத்திரம் உயிர்க் கொலை செய்யும் பாதகர்——சண்டாளர்——நீசர்—புலையர் என்ற இழிபெயர் சூட்டி, இவ்வைதிகர் வெறுக்க வேண்டும்? பிற மிருகங்களுக்கு உரிய உரிமையை இவர்க்கு மறுக்க வேண்டும்? ஒரு வேளை சாஸ்திரங் கற்று சதி செய்ய வில்லை என்பது காரணமாகலாமோ? நன்று, நன்று, "சர்வ பூத தயாபரன்' எனக் கடவுளை வணங்குவதும், அவன் பெயரால் கொலை செய்வதும்.'

பரமன் பெயரால் நிகழும் இப்படு கொலையை நீக்கவே புத்த பகவான் அவதரித்தார். 'அஹிம்சா பரமோ தர்மா' என்ற புத்த மதமும் எழுந்தது. யாகத்தில் கொல்லப் பட்டு நிவேதிக்கப் படும் மிருகம், மோக்ஷத்திற்கு செல்லுவ தாண்மையாலல், யாகஞ் செய்பவன், ஏன், தனது சொந்த தாய், தந்தை, மனைவி, மக்களாகிய உறவினரைக் கொன்று எரித்து, யாக மூலமாய் அவர்கட்கு மோக்ஷத்தை அளிக்க லாகாது? என்ற தருக்க நியாயமான கேள்வியும் எழுந்தது. பௌத்த மதம் ஓங்கியது.

சுயநலமிகளால் புகுத்தப் பட்ட விபரீதமான யாகக் கொலை, சுராபானம் முதலியவற்றால், புனித வேத மதமும் உருக்குலைய நேர்ந்தது. அரும் பெரும் ஞானியர் பெயரால் "இப் பெரியார்" இயற்றிய தந்திர நூல்களே பசுவைக் கொல்லும் கோமேதத்தையும், குதிரையைக் கொல்லும் அஸ்வமேதமாதி யாகங்களையும், போற்றி வளர்க்க லாயின. இவர்கள் கூறும் கோமேதம், அஸ்வமேதம், நரமேதம் என்னுஞ் சொற்கள், வேதப் பொருளை விரிக்க வெழுந்த புனிதப் "பிராமணங்கள்" என்னும் நூல்களில் காணப் படுதல் உண்மையே. ஆனால், அவற்றின் உண்மைப் பொருளை யறியாமல், தமக்குத் தோன்றியவாறு——தமது செய்கைக்கு ஆதாரமாக——அவற்றைத் திரித்துக்கொண்டதே இக் கொடும் பழக்கத்திற்குக் காரணமாய தென்னலாம்.



ஏனெனில், தனது மக்களில் ஒரு பகுதியரைக் கொலை செய்து, தனக்கு அர்ப்பிக்க வேண்டுமென என்றெடுத்த எத்தாயாரேனும் கூறுவளோ? கூறுவளாயின் அவள் தாயா? பேயா? இச்சொற்றொடர்களின் உண்மையைப் பற்றி தயானந்தர் கூறுவதைக் காண்போம்.

"வாம மார்க்கிகள் நினைப்பது போன்ற பொருள் இவ் யாகச் சொற்களுக்கு இல்லை. பசு, குதிரை, முதலியவற்றைக் கொன்று, ஹோமாக்கினியிட்டு, யாகஞ் செய்ய வேண்டு மென்று, எந்தப் புனித வேதங்களும், பிற உண்மை சாஸ்திரங்களும், எங்கும் கூற வில்லை. வாம மார்க்கிகளின் நூல்களில்தான் இவை போன்ற ஆபாச விஷயங்கள் மிளிர்கின்றன. ஞானிகள் எழுதிய எவ்வெவ் உறுதி நூல்களில், இத்தகைய யாகப் பகுதிகள் காணப் படுகின்றனவோ, அவைகளை யெல்லாம் வாம மார்க்கிகளின் 'இடைச் சொருகல்களாக' அறிய வேண்டும். சதபாத பிரமாணம் இதைப்பற்றி அறைவதைக் கேளுங்கள்.

அரசன், தன் குடிகளை, நியாயமாகவும், ஒழுங்காகவும், பரிபாலிக்கிறான். இதற்கு அஸ்வமேதம் என்று பெயர். நிறைந்த பண்டிதன், பயன் கருதாது, பிறருக்கு வித்யா தானம் செய்கிறான். இது அஸ்வமேதம். மீண்டும் ஆகாயத்தைப் பரிசுத்தப் படுத்துவதற்கென வெண்ணை, வாசனை திரவியங்கள் முதலியவற்றை ஆகுதியாக யிட்டு எரிக்கிறான். இது அஸ்வமேதம்.

சதபாத பிராமணம் XIII 1, 6, 3.

உணவுப் பொருள்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளல்——இந்திரியங்களை அடக்கித் தன் வசப்படுத்தல்——சூரிய கிரணங்களை நல்ல வழியில் உபயோகித்தல்——பூமியை, மலினம் நீக்கிச் சுத்தி செய்தல் இவைகள் கோமேதமாகும்.

சதபாத பிரமாணம் IV iii 1,25.

"இறந்தவனுடைய சவத்தை வேத விதிப்படி அடக்கம் செய்தல் நரமேதம் எனப்படும்."

என்று சுலோக பூர்வகமாய் அத்தாக்ஷியுடன் கூறுகிறார். சாதாரண அறிவிற்கும் இது ஒத்ததாகக் காண்கிறது. இல்லையெனினும், அரக்கர்களின் செய்கைக்கு மாறு பட்டதாகவும் இவை புலப்

படவில்லை. கிடக்கட்டும். யாகஞ் செய்பவர், அதனை செய்விக்கும் யக்னனும், அதில் கொல்லப் பட்ட மிருகங்களும், மோக்ஷத்திற்குச் செல்லுகிறதென்றும், அவ்வாறு எரிக்கப் பட்டவை (மிருகங்கள்) களை மீண்டும் உயிர்ப்பித்துத் தருவதாகவும் கூறுகிறார்களே; இது உண்மையா? பொய்யா? எனின்:

அது முற்றிலும் பொய். அவை மோக்ஷத்திற்குச் செல்லுவது உண்மையானால், அப்படிச் சொல்லுபவனையும், அதை ஆமோதிக்கிற அவன் பந்துக்களையும், ஏன் கொன்று யாகாக்கினியி லிட்டு, மோக்ஷத்திற்கு அனுப்பலாகாது? இல்லை. யாகத்தில் கொன்று எரித்த பின்னர், ஏன், அவர்களை உயிர்ப்பித்துத் தரலாகாது எனக் கடாவுகிறார்.

இவை யெல்லாம் சரிதான் என்று ஒத்துக் கொள்வோம். வேதங்களில் இம்மாதிரியான யாகங்களுக்கு அனுமதி இல்லையானால், அச்சமயங்களில் வேத மந்திரங்களை ஏன் உற்சாரணம் செய்ய வேண்டும்? என்பது இயற்கையாக எழும் கேள்வி.

அவை யென்ன செய்யும்? 'சொற்களின் தொடர்களான அவை, தன்னை உச்சரிக்கலாகாதெனத் தடுக்க முடியாது. ஆனால் மிருகங்களைக் கொன்று எரிக்க வேண்டும் என்று அவை பொருள் தருவதுமில்லை. 'அக்னேய ஸ்வாக' என்பது போன்ற வேத மந்திரங்கள், வெண்ணை, வாசனை திரவியங்கள் முதலியவை எரிக்கப் பட்டால், அவை, காற்று, ஜலம், மழை, முகில் இவைகளை சுத்தப் படுத்தி, அதனால் உலகக்ஷேமத்திற்கு உதவி செய்யும் என்றே பொருள் தருகின்றன. சுயநலமிகள் தங்களுக்கு ஆதாயம் தரும் வழிகளையே பின் பற்றுவார்களன்றி, பரோபகாரமான வேதங்களின் உண்மையை எவ்வாறு நம்புவார்கள்?" என முடிக்கிறார்.

எது எவ்வாறாயினும் ஆகுக. யாகத்தைப் பற்றிய ஆபாசமான செய்திகள் பல இருக்கின்றதைக் கடவுளின் அருட்டன்மைக்கு அது மாறுபடுகிறது; இக்காலத்திற்கும் அது பொருந்தாதது. ஆதலின், கடவுளின் பெயரால் உயிர்க் கொலை புரிவதை நம்மவர் விடுவாராக. உண்மை யாகமாகிய தன்னல தியாகம் செய்து உயர் நலமடைவாராக.

க. கந்தசாமித் தேவர்.
"வித்யானந்த சபை" உறுப்பினர்,
மேட்டுப்பாளையம்.



# மனம் போல மாங்கல்யம்.

என்பது பலருமறிந்த எளிய வோர் பழமொழி. அதாவது ஒருவன் எத்தகைய நினைவுகளை சந்ததம் தன் மனதில் போற்றி வளர்த்து வருகிறானோ அதைப் போன்ற வாழ்வையே அவன் பெறுகிறான் என்பது யாங்கன மென்னில், நினைவு மொழியாகும்; மொழி செயலாகும்; செயல் பலனளிக்கும்; என்பதால், 'தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்பது என்றேனும் பொய்ப் படுமோ?

இதன் மெய்மையை நிறுவ, இறந்த, நிகழ், காலங்களில், எத்தனையோ சரித்திர உதாரணங்களுண்டு. அவற்றி லொன்றை இங்கு காண்பாம்.

இடம் பொருள் ஏவலாதிய பெருமிதங்கள் ததும்பிய துரியோதனாதி நூற்றுவரை அவர் தீ நினைவே குலத்தோடும் மாய்த்தது; அவையிலர் எனினும் ஐவராய பாண்டவரை அவர் தம் நன்னோக்கமே வாழ்வித்து இறவாப் புகழ் ஈந்தது என்பதை பாரதம் தெளிவுறுத்துகிறது. எத்தனை துன்பங்கள் தம்மை வளைந்து நெரித்த பொழுதும், பாண்டவர் தமது உத்தமக் கொள்கையினின்றும் பிறழவில்லை. அவர் நன் மனதை உதகரிக்கும் சொல்லும் செயலும் பாரதமெங்கும் சிதறிச் செறிந்திலங்குகின்றன. அவ்வீரப் பெருக்கிற்குக் காரணமாய நினைவு ஊற்றுகளை நாடுவாம்.

பாண்டவர் நாடிழந்து, "காடுறை வாழ்க்கை எய்தி, காய், கனி, மூலந் தின்று, நீடுறு காலம் போக்கிக்" கொண்டிருக்கும் நாட்களிலோர் நாள், மித்திரன் என்னும் முனிவனுக்குரிய நெல்லிக் கனியொன்றைக் கண்டு, அதனைத் தனக்கு வேண்டுமெனக் கேட்கிறாள் பாஞ்சாலி. உடனே, விஜயன், தன் வில்வாங்கி, "மாமுனிக்கு உணவாய் நிறை மதுர ஆமலகந்தன்னை ஏமுறை தொடுத்துவீழ்த்தி", அவட்குத் தருகிறான். இதனைக் கண்டோர், கனிக்குரிய முனி வந்தால் இனி யாது விளையுமோ! என கவல்கின்றனர். இதனையறிந்த பாண்டவ வீரரும் நனி கலங்குகின்றனர். பாண்டவ சகாயனான கண்ணன், இந்நிலையில், அங்கு வருகிறார். உடனே அனைவரும், அவரடி வணங்கி, தம்மை உய்விக்க வேண்டுமென முறையிட, நீவிர் மனதில் நினைப்பதை,

உள்ளது உள்ளவாறே சொல்வீராயின், அப்பழம் மீண்டும் பொருந்தும். ஆதலின், அதனைச் சொன்மின்" என, அகிலத்தாரனைவரு மறிய, அவர் நினைவுகளை வெளியாக்குகிறார். கானக வெம்மையும், சபதத்தடிலும், துரியனின் நன்றியில் செய்கையும், தம்மை மொய்த்து ஈர்த்துண்ணும் அந்நிலையிலுங் கூட அவ்வீரர் தம் மனத்தியல்பை வெளியிடும் சிறப்பை அன்பரே! நோக்குங்கள்---உன்னுங்கள்.

தருமன்:--

'அலகையாம் அன்னையை முன்னங் கொல்லுதல் புரிந்தோய்!
வெல்லுக அறமும் மெய்ம்மையும் ஏக மேனியனும் வெல்லாமல்
செல்லுக பாவம் பொய் மொழி கோபம் தயித்தியர் குலமெனத் தெளிவுற்று
அல்லும் வெம்பகலும் என்மன நிகழும்' என்றனன்.-

பீமன்:---

பிறர் மனையவரைப் பெற்ற தாயெனவும், பிறர் பொருள் எட்டியே யெனவும்
பிறர் வசை யுரைத்தல் பெருமை யன்றெனவும், பிறர் துயர் என் துயர் எனவும்
இறதியே வரினும் என் மனக்கிடக்கை எம்பிரான்! எனவுரைத்தான்
மறவியு மடியுமாறு மல்லியற்கை வலிமை கூர் வாயுவின் மைந்தன்.

அருச்சுனன்:---

ஊனமேயான ஊனிடை யிருக்கு முயிரினைத் துறந்தும் ஒண்பூணும்
மானமே புரப்பது அவனிமேல் எவர்க்கும் வரிசையும் தோற்றமும், மரபும்;
ஞானமேயான திருவடியுடையாய்! ஞால முள்ளளவும் நிற்றலின்
ஈனமே உயிருக் கியற்கை யாதலினால் என்றனன் வீமனுக்கு இளையோன்

நகுலன்:---

குலமிக வுடையர் எழின்மிக வுடையர் துறையில் செல்வமு மிக வுடையர்



நலமிகவுடைய ரென்னினும் கல்வி ஞான மற்பமும் இலாதவரை
வலமிகு திகிரிச் செங்கையாய்! முருக்கின் மணமிலா மலரென மதிப்பேன்
சலமிகு புவியில்," என்றனன் வாகைத்தார் புனைதாரைமா வல்லான்.

சகாதேவன்:---

"ஒருமொழியன்னை, வரம்பிலா ஞான முற்பவ காரணனென்றும்,
தருமமே துணைவன், கருணையே தோழன், சாந்தமே நலனுறு தாரம்
அரியதிண் பொறையே மைந்தன், மற்றிந்த அறுவருமல்லர்தார் உரவென்?"
இருவரில் இளையோன் மொழிந்தனன் தன் மேரிதய மாமலர்க் கிடையெடுத்தே.

ஆஹா எத்தகைய உயர் நோக்கங்கள்! புனித நினைவுகள்! இவற்றாலன்றோ பொறுத்தார் பூமியை ஆண்டார். புகழையும் பூண்டார். பாரத மக்களே! எழுங்கள், நினைவின் வலிமையை யுணர்ந்து, ஒவ்வொருவரும், ஒவ்வொரு நன்னோக்கத்தையேனும் கொள்ளுங்கள். அதன் வழி அஞ்சாது வினை யாற்றுங்கள்; வாகை சூடுத லுறுதி. புகழ் வானில் உமது பெயர்கள் கதிர் உமிழும்: எண்ணிய எண்ணியாங்கேய வல்லது நினைவு; நினைவு மறவாதீர். மனம் போல மாங்கல்யம்.

"தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று".

D. N. V. ராஜு, கோயமுத்தூர்.

# நட்பு.

நண்பர் நமக்குண்டாவது நமது பெரும் பாக்கியமே. உன்னிப் பார்க்கும் போதும், அனுபவத்தில் காணும் போதும் இது மிகவும் உண்மை யெனவே ஏற்படுகின்றது. நாம் தினமும் பார்ப்பவரெல்லோரும், புகை வண்டிப் பிரயாண காலங்களில் வார்த்தை யாடுபவரும், காப்பிக்கடைகளில் சந்திப்பவரும் நண்பராகார். யாராவது சற்று நமக்குப் பழக்க மிருந்ததினாலேயே அவரை நம் நண்பன் என்று நட்புப் பாராட்டுவது உண்மை நட்பல்லதாகும். ஆகவே நட்பின் தன்மையை நாம் சற்று ஆராய்வோம்.

நட்பு செய்வது மிகவும் அரிது. செய்த பின் பயன் பெறுவதும் அதிகம். பின்பு திரிபின்றி நிற்றல் வேண்டும். மாறுதல் ஏற்பட்டுப் பின் சேர்ந்தாலும் அது பழுதேயாகும்.

"நீக்கமரு மிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமி சிறிது நீங்கிப் பழமை போல்
புல்லினும் திண்மை நிலைபோம்".

ஆதலின் நட்பு செய்வது சாதாரணமான காரிய மன்று. நாம் யாவரையும் நட்பினரென்று கொள்ளக் கூடாது. முக்கியமாக நட்புக்கு இருக்க வேண்டியது இருவருக்குமொத்த உணர்ச்சியே. அஃதின்றேல் எத்தனை நாட்கள் பழகினாலும் நட்புத் தன்மை ஏற்படாது. அறிவுடைய பெரியோர்களுக்கே இவ்வித வுணர்ச்சி யுண்டு. அத்தகையோருக்கு நட்பு செய்வதற்கு ஒரு நாளே போதும். அவர்களுக்குள் ஏற்படும் நட்பானது, மிகவும் ஆழ்ந்ததாகவும் நீடூழி நிற்கும் தன்மை வாய்ந்ததாகவு மிருக்கும்.

"ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே"
"இதற்கு மாறாக பலநாள் பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்குட் பாசிபோல் வேர்க் கொள்ளாதே"
பெரியோர் கேண்மை பெறுவது அரிது.

அப்படிக் கிடைக்குமேல் நமது பெரும் பாக்கியமே. பெரியோர் கேண்மை நாளுக்கு நாள் வளர் பிறை போல் வளரும். மூர்க்கர் கேண்மை தேய்பிறை யெனச் செல்லும். இதை நோக்கியே நாம் நல்லாரிடம் சேர வேண்டும். மூர்க்கரோடிணங்கல் கூடாது. அறிவுடையோர் நட்பு தொடருங்கால் இன்பம செய்து கொண்டே போகும். பேதையர் நட்பு துன்பம் விளைப்பது மன்றி உயிருக்கே உலை தேடும். ஆதலின் நட்பு பெறுவதிலும் செய்வதிலும் நாம் நட்பு உணர்ச்சி கொள்ளல் வேண்டும். திருவள்ளுவரும்,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சி
தானட் பாங்கிழமை தரும்" எனவும்
"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு"

எனவும் கூறியுள்ளார். நாம் நட்பு செய்தவருக்குத் துன்பம் நேருங்கால் அவர்கள் துன்புற்றாரென்று கேள்வியுற்ற தருணமே அவருக்கு உதவி புரியப் போக வேண்டும்.

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு"

என்பதும் திருவள்ளுவர் வாக்கன்றோ.

நட்பு செய்யுமுன் நாம் ஆராய்ந்தே செய்தல் வேண்டும். அஃதின்றேல் பெருந் துன்பம் விளையும்.

"ஆய்ந்தாய்ந்து கொள்ளா தான் கேண்மை
தான் சாந்துயரந் தரும்"

என்பது தமிழ் மறை முழக்க மன்றோ! நற்குண முடையோர், நற்குடியிற் பிறந்தோர், குற்ற மற்றோர், குற்றத்திற்கு அஞ்சுவோர், பிறர் குற்றம் செய்யப் புகின் அவரை இடித்துக் கூறி நல்வழி புகுத்துவோர், நமக்குத் துன்பம் நேரிடுங்கால் கை விடாதவர்கள், புறங்கூறாதவர்கள், சொல்வேறு வினை வேறில்லாதவர், இன்னும் இதைப் போல் அரிய பெருங் குணமுடையவர்களே, நமக்கு நண்பராகத் தகுதியுள்ளோர். இத்தகையோர் கேண்மையே நன்மை பயக்கும்.



தீயோர் நட்பை நாம் எப்பொழுதும் கொள்ளக் கூடாது. எவ்விதத்திலும் நமக்குத் தீங்கே உண்டாகும். அவர்கள் நட்பு, நாமே சனியனை விலைக்கு வாங்கியது போலாகும். அவர்களுக்காக நாம் எவ்வளவோ தீய கருமங்கள் செய்ய அவசியம் நேரிடும். அப்படிச் செய்யா விடினும் அத்தீயோரே நமக்குத் தீங்கு செய்ய ஆரம்பித்து விடுவார்கள். சிறிய விஷயங்களுக்கும் அவர்கள் பகைமை கொள்வார்கள். அவர்கள் பகைமையோ மிகவும் துன்பம் விளைக்கும். அறிவுடையோர் பகைமை தீயோர் பகைமையை விட கோடி மடங்கு நன்றாம். ஆதலின் தீயோர் நட்பை அறவே யொழிக்க வேண்டும்.

"அற்ற குளத்திலரு நீர் பறவை போல்
உற்றுழித்தீர் வாரூர வல்லர்"

என்றபடி நம்மிடம் பொருளிருக்கும் வரை மட்டும், அறிவில்லார் உறவு பாராட்டுவார்கள். பொருள் சற்று நீங்கினால் நம்மை நீங்கி விடுவார்கள். அறிவுடையோரோ!

அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே, ஒட்டி 'உறவாடுவோர்கள்.'

அக்காரணங் கொண்டும் நாம் தீயாரோடிணங்கல் ஒழிக்க வேண்டும்.

"தீயோர் சொற் கேட்பதும் தீது,
தீயோர் குணங்களுரைப்பதும் தீது,
தீயோரிடத்தில் இணங்கியிருத்தலும் தீதன்றோ!

நல்லோரிணக்கம் நமக் குண்டாக ஈசன் கருணை புரிவாராக.

## உலக விநோதம்.

(நவசக்தி எழுதுவது)

### மனைவி மீது கோபமா?

கல்கத்தா டிப்டி மாஜிஸ்ட்ரேட் முன்னர் இது காலை ஒரு விநோதமான வழக்கு விசாரணைக்கு வந்திருக்கிறது. துளசி ராம்தாஸ் என்னும் இருபத்தைந்து வயதுடைய ஒருவர் ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொண்டார். ஆனால் அந்தப் பெண் இவரை விரும்பவில்லை. இதனால், அப்பெண் தன் கணவன் வீட்டுக்குச் செல்லாம

லே இருந்து வந்தாள். இப்படி யிருக்கையில் ஒருநாள் துளசி ராம் தாஸ் தமது மாமனார் வீட்டுக்குச் சென்றார். அன்று துளசி ராமின் படுக்கையறைக்கு அவன் மனைவி செல்ல மறுத்து விட்டாள். இதனால் துளசிராமுக்கு அதிக மனோவேதனை ஏற்பட்டுத் தமது உடம்பெல்லாம் துணியைச் சுற்றிக் கொண்டு மண்ணெண்ணெயை ஊற்றி நெருப்பு வைத்துக் கொண்டார். நெருப்பின் வேகம் அதிகமாகவே இவர் கூச்சலிடத் தொடங்கினார். உடனே இவர் மாமியார் கதவைத் திறந்து உள்ளே வந்து பார்த்து விஷயத்தை வெளிப்படுத்தவே, அனைவரும் ஓடி வந்து துளசிராமை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். இவர் இப்பொழுது சிறிது குணமடைந்திருக்கிறார்.

## முற்பிறப்பின் நினைவு.

மெயின்புரி ஜில்லா காராரி கிராமத்தில் ராம்சரன் மகாஜன் என்பாருக்கு 7-11-1927ல் பிறந்த ஆண் மகவுக்கு முற்பிறப்பின் நினைவிருக்கிறதாம். மூன்று மாதங்களுக்கு முன்னர், இந்தக் குழந்தை கோட், அங்க வஸ்திரம் முதலியவைகளை உடுத்திக் கொண்டு பார்ஹா என்னுமிடத்துக்குப் பிரயாணப்பட்டான். அவன் தந்தை அவனை எவ்விடம் செல்கிறாய் என்று வினவியதற்குத்தான் பார்ஹா என்னும் கிராமத்தில் கோபி பனியா என்னும் நாமம் வகித்த ஒரு கடைக்காரனாயிருந்ததாகவும், பாம்பு கடித்து மரணமடைந்ததாகவும், தனக்கு ஒரு மனைவியும் இரு புதல்விகளுமிருப்பதாகவும், தன்னுடைய வீட்டில் பணத்தைப் புதைத்து வைத்திருப்பதாகவும் கூறினான். பார்ஹா என்னும் கிராமம் காராரி கிராமத்திற்கு மூன்று மைல் தூரத்திலிருந்ததால் இவ்விஷயம் உண்மையெனத் தெரிய வந்தது. இதை அறிந்த கோபி பனியாவின் மனைவி தம் இரு குழந்தைகளுடன், காராரி கிராமத்திற்கு வந்து சேர்ந்தாள். அவள் பல ஜனங்களின் மத்தியிலிருந்தும், அவ்வதிசயக் குழந்தை அவளையும் இரு குழந்தைகளையும் அடையாளம் காண்பித்தது. அவள் போக விரும்பிய போது இந்தக் குழந்தை தடுத்து விட்டது. இக்குழந்தையைத் தனக்குத் தந்து விட வேண்டுமென அவள், அதன் பெற்றோர்களை வேண்டிக் கொண்டாள். இந்தக் குழந்தையின் விஷயம் வெளிப்



டுவதற்கு முன்னரே, வீடு விற்கப்பட்டு விட்டதால், பணமிருக்கிறதா வென்பதைக் கண்டு பிடிக்க இயலவில்லை. ஆனால் அந்த வீட்டை வாங்கியவர், முன்னிருந்த ஏழ்மை நிலைமாறி, இப்பொழுது பணக்காரராக விளங்குவதாகத் தெரிகிறது என்று "லீடர்" பத்திரிகையில் டிப்டி கலெக்டர் ஒருவர் எழுதுகிறார்.

## கற்பைக் காத்துக்கொண்ட பெண்மணி.

ஜதிராம் நஸ்கர் என்ற ஒரு வாலிபர் மீது "அலிபூர் சப் டிவிஷனல் ஆபீஸர் கோர்ட்டில் ஒரு வழக்கு கொண்டு வரப் பட்டது. கிரான் பாலா தாசி என்ற பதினேழு வயதுள்ள ஒரு பெண்மணி, அலிபூரில் வசித்துக் கொண்டிருந்தாள். அவள் மிகுந்த ரூபவதி. அவளுடைய கணவன் அடிக்கடி வியாபார விஷயமாகக் கல்கத்தாவுக்குச் சென்று விடுவது வழக்கம். அச்சமயங்களில், ஜதிராம், தன் விருப்பத்திற்கு இணங்கும்படி, அப்பெண்மணியைக் கேட்டுக் கொண்டே வந்தான். இப்படி யிருக்கையில், ஜதிராம் ஒரு நாள் பலாத்காரமாகத் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முயன்றான். இதனால் வெகுண்ட அப்பெண்மணி, ஓர் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு ஜதிராமை நன்றாகப் புடைத்து விட்டாள். இதனால் ஜதிராம் மூன்று மாதம் ஆஸ்பத்திரியில் கிடக்க வேண்டி யிருந்தது. பிறகு இது சம்பந்தமாக வழக்குத் தொடரப் பட்டது, ஜசிராம் நஸ்கர் ஐந்துமாதக் கடுங்காவல் தண்டனை யடைந்தார். மாஜிஸ்திரேட் தீர்ப்புக் கூறுகையில், இந்தப் பெண்மணியின் வீரம் பாராட்டத் தக்கதென்றும், வங்காளப் பெண்கள் இந்த உதாரணத்தைப் பின்பற்றுவார்களென்று தாம் நம்புவதாகவும் கூறினார்.

## பயத்தினால் மரணம்.

மனிதர்களுக்கு ஏற்படும் வியாதிகள் பல, அச்சத்தினாலேயே ஏற்படுகின்றன வென்றும் இதனால் மரணங்கள் நேரிடுகின்றன வென்றும் அறிஞர்கள் கூறுவது வழக்கம். இது சம்பந்தமாகப் பாரிஸ் நகரில் சமீபத்தில் ஒரு சம்பவம் நடை பெற்றிருக்கிறது. ஒரு பிரபல வைத்தியர், அச்சத்தினாலேயே மரணம் உண்டாகிறதென்பதை நிரூபிக்கத் தாம் ஒரு பரிசோதனை செய்ய விரும்புவதாகவும், இதற்காக மரண தண்டனை விதிக்கப் பட்ட ஒரு குற்றவாளியைத் தமது வசம்

ஒப்புவிக்க வேண்டுமென்றும் அரசாங்க நீதி இலாகா மந்திரியைக் கேட்டுக் கொண்டார். அப்படியே, மரண தண்டனை விதிக்கப் பட்ட ஒரு குற்றவாளி இவர் வசம் ஒப்புவிக்கப் பட்டார். அந்தக் குற்றவாளியைப் பார்த்து, வைத்தியர் பின் வருமாறு கூறினார்:—"ஐயா. உங்களுடைய குடும்பத்தின் நற்பெயரைப் பாதுகாக்க விரும்பி சில நண்பர்கள், உங்களைத் தூக்கு மேடையில் ஏற்றவேண்டாமென்று நீதிபதியைக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அவர் இணங்கி, நீங்கள் சிறைச்சாலையிலேயே இறந்து போக வேண்டு மென்று கட்டளையிட்டிருக்கிறார். ஆதலின், எவ்விதத் துன்பமுமின்றி, மெது மெதுவாக நீங்கள் இறந்து போவீர்கள்." இதற்கு அந்தக் குற்றவாளி இணங்கினன். பிறகு அவனை இரண்டு வைத்தியர்கள் ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்று கண்களை இறுக்க மூடி விட்டு ஒரு மேஜையின் மீது படுக்கவைத்து, அதனுடன் சேர்த்துக் கட்டி விட்டார்கள். பிறகு அவனுடைய ரத்தக் குழாய்களில் நான்கை ஓர் இறகு பேனாவினால் கீறி விட்டார்கள். மேஜையின் நான்கு மூலைகளிலும் தண்ணீர் தொட்டிகளை வைத்து அதிலிருந்து கீழே ஒரு தொட்டியில் தண்ணீர் விழுமாறு ஏற்பாடு செய்திருந்தார்கள். மேற்படி இரத்தக் குழாய்களை மெதுவாகக் கீறியவுடன், இந்தத் தொட்டிகளில் நீர் விழ ஆரம்பித்தது. குற்றவாளி தன் தேகத்திலுள்ள இரத்தமே இங்ஙனம் கொட்டுகிறதென்று கருதினன். இதனால் அவன் பலஹீனமடையத் தொடங்கினன். இச்சமயத்தில் இரண்டு வைத்தியர்களும் தாழ்ந்த குரலில், ஆனால் குற்றவாளியின் செவிக்குக் கேட்குமாறு, பேசிக் கொண்டார்கள். அதாவது ஒருவர், "எவ்வளவு நல்ல இரத்தம்?" என்று கூறினர். "பாவம், இந்த மனிதன் இறந்து போகிறான்; இன்னும் பல வருஷங்கள் இவன் ஜீவித்திருக்கலாம் என்று மற்றொரு வைத்தியர் கூறினர். "ஒரு மனிதன் தேகத்தில் எவ்வளவு இரத்தம் இருக்கிறது?" என்று முதல்வர் கேட்கிறார். "இருபத்துநான்கு பவுண்டு இரத்தம் இருக்கிறது; இப்போழுது பத்து பவுண்டு இரத்தம் வந்திருக்கிறது என்று பின்னவர் விடையளித்தார். இவைகளை யெல்லாம் படுத்துக் கொண்டிருந்த அந்தக் குற்றவாளி கேட்டுக் கொண்டே யிருந்தான். கடைசியில் அவன் மூர்ச்சையாகி அப்படியே இறந்து போனன். ஆனால் அவனுடைய



தேகத்திலிருந்து ஒரு சொட்டு இரத்தங்கூட கீழே போகவில்லை. அவன் மரணத்திற்கு அச்சமே காரணம்.

## உலக நடப்பு.

சென்னை மாகாணத்தில் 60606 கிராமங்கள் இருக்கின்றன. ஆனால் 2698 கிராமப் பஞ்சாயத்துகளே இருக்கின்றன.

1929ம் ௵ மார்ச் மாதத்தோடு முடியும் ஒரு வருஷத்தில் பிரிட்டிஷ் தபாலாபீசுகளின் மூலமாக 9000000 பவுன் அதிக வருமானம் கிடைத்திருக்கிறது.

இந்தியாவில் நடை பெற்று வரும் அன்னிய துணி பகிஷ்கார இயக்கச் சம்பந்தமாக இங்கிலாந்தில் 123 பருத்தி வியாபாரக் கம்பெனிகள் தங்கள் வியாபாரத்தை நிறுத்தி விட்டனவாம்.

இங்கிலாந்தில் நான்கு சதுர மையிலுக்கு ஒரு ஸ்தல ஸ்தாபன வீதம் 14427 ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. ஆனால் இந்தியாவில் 1494 சதுர மையிலுக்கு ஒரு ஸ்தல ஸ்தாபன வீதம் 682 ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கின்றன.

ரோம் நகரத்தில் நான்கு வயதுக் குழந்தைகள் கூட மோட்டார் சைகிள் விடுமாம்.

புதுச்சேரியிலுள்ள அரவிந்த கோஷன் ஆச்ரமத்தில் பல வகுப்பினர் வசித்து வருகின்றனர். அமெரிக்கர், ஆங்கிலேயர், பிரன்சுக்காரர் உட்பட 80 பேர் இருக்கின்றனர். இவர்களில் 7 பேர் முஸ்லீம்கள். 4வர் பெண்கள். இவர்களுள் பெரும்பாலோர் ஐதராபாத் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள். அரவிந்தர் ஆண்டுக்கு மும்முறையே அறையினின்றும் வெளியே வருவாரென்றும், இவர் இனி அரசியல் விஷயங்களில் தலையிட விரும்பவில்லை யென்றும் ஸ்ரீமான் வரேந்திர குமார போஷ் தெரிவிக்கிறார் என நவசக்தி எழுதுகிறது.

## நெற்குன்ற வாணர்.

(மூலத்துறை ஸ்ரீ. பெ. குமாரநாயகம் பிள்ளை அவர்கள்.)

உலகம் யாவையு மீன்றவளாகிய உமாதேவியின் உழுவலன்பிற்கு உடல் குழைந்து, அவள் வேண்ட இருநாழி நெல் உதவி முப்பானிரு வறங்களும் தழைத்தோங்க, அருள் புரிந்த ஏகம்ப

நாதன் வீற்றிருக்கும் கச்சி நகரிலே, குன்றனைய தோள்கள் படைத்த தொண்டைமான் அரசு நடாத்துகையில் வேளாளர் மரபில் நெற்குன்ற வாணர் என்ற பெரியார் ஒருவரிருந்தனர்.

அவர், அன்பு, அடக்கம், பொறுமை, கல்வி, கடவுள் வழிபாடு முதலிய தன்மைகளில் தலை சிறந்தவராய்த் திகழ்ந்ததோடு

> அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
> போ ஒய்ப் பெறுவ தெவன்"

என்ற பொய்யா மொழியையும் நன்கு போற்றியவராய், வாசுகி யம்மையே போன்ற

> "அன்னை தயையும் அடியாள் பணியும்
> பொன்னி னழகும் புவிப் பொறையும்—வன்னமுலை
> வேசி துயிலும் விறல் மந்திரி மதியும்"

உடைய ஓர் பாவை நல்லாளைத் திருமணம் முடித்துத்

> "தென் புலத்தார் தெய்வம் விருந்து ஒ க்கான் என்றாங்கு
> ஐம் புலத்தார் ஓம்பல் தலை"

என்ற இல்வாழ்க்கைக் கடன்களையும் செவ்வனே நடாத்தி வருபவராயினர்.

இவர் இவ்வாறாகத் திருமகள் தோன்றும் ஆழியிலே பெரியம்மையாரும் தோன்றினாற் போன்று, இவரது குலத்திற்றானே, நெறியல்லாவற்றை நெறி யெனவும், அறத்தைக் கூற்றெனவும், கல்வியைத் தொல்லையெனவும், கடவுள் வழிபாட்டை விளையாட்டெனவும் மதித் தொழுகும் கயவ னொருவன் தோன்றி யிருந்தான். அவன்

> "ஞானமுங் கல்வியும் நவின்ற நூல்களும்
> ஈனர்க் குரைத்திடில் இடர தாகும்"

என்ற சொல்லை மெய்ப்பித்துக் காண்பிப்பான் போன்று ஒரு சிறிய வழக்கில் வாணரை இலை தைக்கும் இழி தொழிலியற்ற வைப்பதாய் ஆணையிட்டுக் கொண்டான்.

அக் கொடியோன் அல்லாது உறைத்திருப்பதையும் பொருட் படுத்தாது, வாணர் வழக்கம் போல் ஈகை வினைத்துறை நின்று, அரையனுக்குரிய ஆறில் ஒரு பகுதியையும் அவ்வறப் பகுதிக்கே



யுதவியும் வந்தால் செவிக்கினிய மெல்லோசை மிகுந்ததும் இயற்கை வாசச் செறிவுடையதும் மற்றுள்ள எல்லா இனிமைகளையும் தனக்கே உரித்தாகிய தமிழ் மொழியில் புலமை வாய்ந்துள்ள இன்னுயிர்க் காதலியுடன் வாணர் பல அரிய பொருட்களைப் பற்றி உரையாடுவதிலேயே பொழுது போக்கினமையால், அவரது வேளாண்மைத் தொழிலை மேற்பார்வை யிடுவாரின்றி விளைவு குன்ற அவருக்கு வறுமை மேலிட்டது.

> "செவிக் குண வில்லாத போது சிறிது வயிற்றுக்கு மீயப்படும்"
> "செவிச் செல்வம் செல்வத்து ளெல்லாம் தலை"

என்று ஆன்றோர் கூறியவாறு, கல்வியில் மேம்பட்ட துணைவியாருடன் அளவளாவுதலே பெருஞ் செல்வமென வாணர் கொண்டமையின், பொருட் குறை யென்னும் வறுமை அவரை என் செய வல்லது? ஆயினும் அப்பர் சீகாழிப் பிள்ளையார்முதலிய சமயக் குரவர் வறுமையினால் துன்புற்றிலரேனும் தம்மைச் சூழ்ந்து வரும் அடியார் கூட்டங்கள் வருந்தா திருக்க, வீழி மிழலையானிடம் படிக்காசு பெற்றமை போல வாணரும் தன்னையடைந்த ஒரு பாவலன் பொருட்டுச் சிறிது பொருள் வேண்டிப் பெரிதும் இடுக்கண் எய்தினர். எவ்வாற்றானும் கிடைத்திலது. வாணரோ,

> ஆற்றுப் பெருக்கற்று அடிசுடுமந் நாளும் அவ்வாறு
> ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
> நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
> இல்லையென மாட்டார் இசைந்து"

என்ற இயல்பினராகையால், வேறு ஒருவரும் விலக்குவாரும் கொள்வாரு மின்மையால் தாம் முன்பு வஞ்சின முரைத்த செல்வனிடம் விலைப்பட்டு, பொருள் வாங்கிப் புலவனுக் குதவினார்.

> தலை கொடுத்த குமணனினும் உயிர் கொடுத்த நந்தியினுந் தமிழ்க்காகத் தான் போய்
> விலைபடுமிந் நெற்குன்ற வாணனை மேலெனத் துணிந்து விளம்பலாகி
> நிலை பொறுத்த புலமையுற்று மானத்தும் புகழ் பெரிதா நினைத்தாலுங்
> கலையுணர்ச்சி சிறிதறியு மினத்தோடிகல் கொடுங் குணமுங் கடந்
> தானம்மா! [புலவர் புராணம் பக்கம் 324.]

விலைக்குக் கொண்டவனோ முன்பு பேசிய ஆணை நிறைவுடைய அவரை இலை தைக்கச் செய்தான்.

வாணர் தமது நிலையை மனைவியாருக்கு ஒரு பாவில் வரைந்து
விடுத்தார். அறிந்த அணங்கு போன்றார் "உற்ற விடத்து உயிர்
வழங்கும் பண்பின" ராதலால், பற்றலர்க்குப் பணியச் செய்த திரு
வருளை நினைத்துச் சாதலினும் பெருந் துயரத்தை தங்களுக்குக்
கொடுத்தது முறையன்றென முறையிட்டுச் சொல்ல வொண்ணாத்
துன்புற்றார். அப்பொழுது, காவலனது தூதுவர் சிலர் வாணரைக்
குறுகி மன்னனுக்குறிய பொருள் முழுமையும் கொடுக்க வேண்டும்.
இன்றேல் அவன் முன் வரவேண்டுமென வேண்ட, விடையாய் அவ
ர் விலை கொண்டான் பணித்தவாறு வருவதாய்ச் சொல்ல அத்தீ
யோன் வேந்தன் பால் செல்ல விடுத்தனன். சேவகருடன் அவர் இல்
லம் சென்று மாண்புடைய மனைவியரால் அறுசுவை மிக்க அடிசிலூ
ட்டப் பட்டுத் தொடர்ந்து வந்தோரும் உண்டு களித்த பின் பிரிய வி
டை கொண்டு போந்தனர். வாணரது திருநீற்றி னொளியும் கண்டி
கையின் கவினும் அரையனது சினத்தை ஒழித்தன வாயினும் மன்ன
ன் ஆணையின் பொருட்டு முனிவுடையான் போன்று அவரை நோக்
கி இறைப் பகுதி யெல்லாம் கொடாவிடின் துன்புறுத்துவதாய் அச்
சுறுத்தினன். வாணரோ வணக்க மிக்காராய் "வளவ! நின் பொருளை
அறப்பகுதியிலேயே செலவிட்டுள்ளேன். அன்றியான் ஞ்சித்துக்
கவர்ந்து கொள்ள வில்லை; இதற்குப் பெருமானே சான்றுவன் என்னை
எது செய்யினும் செய்க" என்றனர். கேட்ட தொண்டைமான் ஏவ
லரை விளித்து இவரைத் தன் நாட்டின் புறத்தே விட்டு வருமாறு
பணித்துப் பின் அவரை நோக்கி "திறை முழுமையும் கொண்டு
வரும் நாளல்லது தன் நாட்டி லிருத்தலாகா" தெனக் கட்டளை யிட்
டான். இவ்விவரத்தை நாயகிக்கு ஓர் செய்யுளில் யாத்து விடுத்த
பின்னர் சோழ நாடடைந்தார்.

ஆங்கு, கண்டு கைதொழுவாருக் கருதற்கரிய கண்ணுதலான்
கழல் நல்கும்பெரும் பெற்றப் புலியூர் முதலிய சிவபெருமான் பதிகள்
பலவும் தொழுது, ஆண்ட அரசுகள் சிவானந்த வடிவாகிச் சிவத்தி
லிரண்டறக் கலந்தப் பாவையார்கேள்வருக்கு மட்பலகை (செங்கல்)
பசும்பொற் பலகையானதுமான திருப்பூம் புகலூரில், வாணர் ஓர்
பாவை, வேழ முகத்தோன் முன்பாடக் கேட்ட அவ்வாலயத் தொ
ண்டு செய்யும் பெண் அவரை நெருங்கி, அக்கவியைக் காப்பாக வை
த்து ஓர் அந்தாதி பாட வேண்டுமென இறைஞ்ச, அவர் அந்தாதி
பாடுவதாயின் தாம் தொண்டைமானுக்குச் செலுத்த வேண்டும் பொ
ருட்டொகுதி யவரால் கொடுக்க வியலுமா? என்று கேட்டார்.

அவர் விழைவன வெல்லாம் கொடுப்பதாய் மொழிய வாணர்
பூம்புகலூர் இறைவன் மேல் இணையில்லா அந்த தி ஒன்று பாடி மு
டித்தனர். விருப்பம் செவ்வனே முற்றுப் பெற்றதும் அம்மாது



வாக்களித்த அளவே யன்றி இருமடங்கு செல்வமளித்துப் பின்னும்
வேண்டும் சிறப்புகளும் உதவி வாணரை வணங்கினள்.

வாணர், பெற்ற சிறப்புகளுடனும், செல்வக் குவியல்களுடனும்,
வேந்தன் பாலணுகி, கடமையைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்ட,
அவன் பொருள் வந்த ஆற்றைக் கேட்டறிந்து தன்னுள் வெட்கி,
அவருக்கே அவ்வளவையும் நன் கொடையாக்கி யுள்ளதாய்ப் பகர்ந்
தான். பின்பு அவனது விடை பெற்றுத் தமதிருப்பிடம் சென்று
திருவருளை நினைத்துக் கொண்டு முன் போலவே அன்பு, ஈகை முத
லிய செவ்விய வாழ்க்கைகளைக் கடைப்பிடித்து, இல்லாளுடனும், பிற
சுற்றங்களுடனும் களிப் பெய்தி வாழ்ந்து வருகையில், முன்பு இவ
ரை இலை தைக்க விடுத்தான் பொருள் வருவாய் ஒன்று மின்றி இடுக்
கண் அடைந்ததைக் கேட்டு,

"என்று முகமன் இயம்பாதவர் கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்"
இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்ற பெரியோர் கூற்றின்படி தாமே அவனிடம் சென்று வே
ண்டும் உதவிகள் புரிந்து, அவனது தொன்மை நிலையில் வாழச் செய்
தனர்.

பொற்புறு செல்வமு மிடியுமாறிடற்கு மரசனுளிற் பொங்கும் கோபம்
அற்புறு வாயினு மாயிடு மென்றற்கு நன் மனையாள் ஆக்கத்திற்கு
கற்பு நடர் பண்பினுக்கு மேனைக்கும் பத்தரெவர் நவிவுற்றாலும்
பிற்புள செய்திதற்கு மிக்கதையோர் சான்றாகும் பேசுங்காலே.

ஆணுருவாய் உயர்குலத்திற் பிறந்து பெரும் செல்வ மனுபவித் திட்
டாலுஞ்

சேணுநிலவும் புகழும் பெருங் கீர்த்தி விளையாமற் செத்தாராயின்
மாணுயர் தென்புகலூரான் திருவடிக்கோர் தமிழ்மாலை வாங்கிச்சூட்டி
காணுமடமுள் தவிர்த்து வாழ்ந்த மகளினும் தாழ்வார் நவில லாமே.

# மதிப்புரை.

## கொண்டை கட்டி வேள்ளாளர் சங்கம்.

தொண்டை மண்டலம் களத்தூர் கோட்டம் குரும்பரை நாடு
கொண்டைகட்டி வேளாளர் சங்கத்தின் அண்ணாமலையார் தர்ம பரிபா
லன விஷயமாய்க் கூடிய தனி மகா நாடு கூட்டத்தின் தீர்மானங்கள்
வரப்பெற்றோம். ஷை அண்ணாமலையார் தர்ம விஷயமாக திருவண்ணா
மலையில் நடபாவி நந்தவனம் என, ஒன்றை ஆன்றோர்கள் ஏற்படுத்தி
அண்ணாமலையார் தேவஸ்தானத்திற்குப் புஷ்பம் சமர்ப்பித்தும் ஒரு
தீப கைங்கரியமும், சிற்சில காலங்களில் மகேஸ்வர பூஜையும் செய்

வித்யா தர்மத்தை நடத்தி வந்தார்கள். இக்கைங்கர்யம் சில காலம் நடந்து, பின் தர்ம வரிப்பணம் சரியாக வசூல் செய்யாது நின்று விட்டது. இங்ஙனம் சரியான கவனிப்பின்றி நின்று விட்டதற்கு முக்கிய காரணம் வேளாள இளைஞர்களிடையே ஏற்பட்ட ஊக்கக் குறைவே யன்றி வேறல்ல. ஆனால் மறுபடியும் 1918ம் ஆண்டில் ஸ்ரீமான்கள். அந்தியூர் இரத்தின முதலியார், சா. சிவானந்த முதலியார், பழனிவேலு முதலியார் ஆகியோர்கள் முயற்சியால் திருவானைக் கோயிலில் ஓர் கூட்டம் கூடி தர்ம வரியை 5 அணாவினின்று 12 அணாவாக உயர்த்த வேண்டுமென்று தீர்மானித்து, அம்மகா நாட்டிலியே 1250 ரூபாய் கையொப்பம் வாங்கினார்கள். ஆனால் 1918ம் ஆண்டு முதல் 1929-ம் ஆண்டு வரையிலும் இந்த தர்மம் நின்று விட்டது. இதற்கு முக்கிய காரணம், அடிக்கடி நம்மவர்கள் கூட்டங் கூடாததும், நம் சமூக அபிவிருத்திக்கென ஓர் பத்திரிகையின்மையே யன்றி வேறல்ல.

ஆனால் ஆன்றோர்கள் ஏற்படுத்திய தர்ம கைங்கரியத்தை எந்த விதத்திலும் நிறுத்தக் கூடாதென 8-12-29-இல் பொர்பந்தல் கிராமத்தில் அனுமீஸ்வர் தேவஸ்தானத்தில் ஸ்ரீமான்கள் அ. துரைவேலு முதலியார், கு. மா. கந்தசாமி முதலியார் ஆகியோர்கள் முயற்சியால் ஒரு கூட்டம் கூடி "இனி தர்ம பரிபாலன கமிட்டியார் யாதொரு அசிரத்தையின்றி வெகு சுறு சுறுப்பாக வேலையைத் துவக்க வேண்டுமென்றும், சீக்கிரம் இன்னொரு மகாநாடு கூட்ட வேண்டுமென்றும், தீர்மானித்து அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்து கொண்டு வருவது மிகவும் போற்றத் தக்கது. உறங்கிக் கிடக்கும் நம்மவர்கள் முன்னேற்றங் கருதியும், தர்ம பரிபாலன சங்கத்தை ஒழுங்கு பெற நடைபெறச் செய்யவும் ஊக்கம் கொண்டுழைக்கும் ஸ்ரீமான்கள் பழனிவேலு முதலியார், சி. வசந்தப்ப முதலியார், துரைவேலு முதலியார், அம்பலவாண முதலியார் ஆகியோர்கள் முயற்சி போற்றற்பாலது. இனியேனும் நம் சமூகத்தவர்கள் ஒற்றுமையாய் இருந்து அடிக்கடி மகாநாடுகள் கூட்டி தர்ம கைங்கரிய விஷயத்திலும் சமூக அபிவிருத்தி விஷயத்திலும் ஊக்கத்துடன் உழைப்பார்களாக.

"ஒன்றுபட் டாலுண்டு வாழ்வு
நம்முள் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு".

"பாரதியார்".

# வேளாள மித்திரன்.

வேளாள சமூக முன்னேற்றத்தையும் தேசிய அபிவிருத்தியையும் தழுவி வெளி வரும் தமிழ் மாத இதழ்.

## வேளாள மித்திரனில் வெளி வரும் விஷயங்கள்.

| | |
|---|---|
| சமூக சீர் திருத்தம். | மாதர் விடுதலை. |
| அயல் நாடுகளில் நம்மவா. | சுகாதாரம். |
| தேகப் பயிர்ச்சி. | மது விலக்கு. |
| ஆராய்ச்சி. | ஆசார சீர் திருத்தம். |
| சாரணர் இயக்கம். | தீண்டாமை விலக்கு. |
| அரசியல். | வியாபாரம். |
| விவசாயம். | சன்மார்க்க இயக்கம். |
| கிராம நிர்மாணம். | தொழிலாளர் இயக்கம். |

இப்பத்திரிக்கைக்கு விஷயம் எழுதும் அறிஞர்களில் சிலர்.

ஸ்ரீமான்கள் K. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L., திருநெல்வேலி.
,, C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., வக்கீல், கோயமுத்தூர்.
,, Dr. D. S. P. Raja, மதுக்கரை.
,, சதாசிவ முதலியார், B.A., சீயாழி.
,, பண்டிட் முத்துத் தாண்டவராயம் பிள்ளை, சீயாழி.
,, V. ராமலிங்கம் பிள்ளை, நாமக்கல்.
,, C. R. நாராயணசாமி முதலியார், B.A., செங்கற்பட்டு.
,, வல்லை பால சுப்பிரமணிய முதலியார், B.A., சென்னை.
,, புன்னைவனநாத முதலியார், திருநெல்வேலி.
,, பொன்மார் நடேச முதலியார், தமிழ் பண்டிதர், செங்கல்பட்டு.

வேளாள குல மக்களே. தமிழ் நாட்டு சகோதரர்களே. வெளி நாட்டு அன்பர்களே. சமூக சீர் திருத்தத்திற்காகவும், தேசிய முன்னேற்றத்திற்காகவும், வெளித் தோன்றும் இவ் வேளாள மித்திரனுக்கு உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

இத்தனை சிறப்புடன் உதயமாகும் வேளாள மித்திரனை அதிகமாகவும், அன்புடனும் ஆதரிக்க வேண்டியது வேளாளர்கள் கடமையாகும். உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய வேண்டுமென்றால் வேளாள மித்ரனில் விளம்பரம் செய்யுங்கள்.

சந்தா விபரம்

உள்நாடு வருட சந்தா ரூ. 2. வெளிநாடு வருட சந்தா ரூ. 2—4—0.

"வேளாள மித்திரன்" ஆபீஸ்

மதுக்கரை P.O. கோயமுத்தூர் ஜில்லா.

(Via) போத்[illegible]

## இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

இல்வாழ்க்கையில் ஈடு பட்ட இருபாலர்க்கும்
இன்றியமையாத இன்ப நூல்.
இதன் விலை ரூபா 2.
இது வரை 17,000 பிரதிகள் விற்பனையா யிருக்கின்றன.

## கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது.

சோப்புகள், மெழுகு வர்த்திகள், தீ குச்சிகள், வார்னீஷ் பிஸ்கட்டுகள், பென்ஸில்கள், பல வித மருந்துகள், இன்னும் போன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில் திண்டாட்ட முள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந் இருக்க வேண்டும். 300 பக்கம். ஏரோப்ளேன் ட்ரேட் உள்ளது.

இதன் விலை ரூபா 1-8-0.

## விகட விநோதக் கொத்துகள்.

இப்புஸ்தகத்தில் முதல் பக்கத்திலிருந்து கடைசி வரை முண்டு விகடமாகவே யிருக்கும். ஒவ்வொரு பக்கத்துக்குக் கு சது இரண்டு விகடப் படங்களாவது இருக்கும். சிரிப்பே அ எப்பேர்ப்பட்ட வரும் இந்நூலில் உள்ள ஒரு வி'டத்தைப் ப விட்டால் உடனே கொல்லென்று தம்மை யறியாமலே சிரி இந்நூல் உங்கள் கைவசம் இருந்தால் நீங்கள் எப்பொ ஆனந்தமா யிருப்பீர்கள்.

இதன் விலை அணா 10.

ஓயாச்சிரிப்பு ! ஓயாச்சிரி

சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாய் விட்ட தென்று
ஒருவர் எழுதுகிறார்.

## முத்து மாமா.

என்ற விகட விநோதக் கதையை நீங்கள் படித்துப் பார்க் கிறீர்களா? இல்லா விட்டால் உடனே வாங்கிப் படியுங்கள். நீ படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூ போது கூட சிரிப்பீர்கள். இதைப் போன்ற கதை தமிழில் இது யிலும் வெளி வந்ததே யில்லை.

வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
இதன் விலை அணா 4.

---

வேளாள மித்திரன் ஆபீஸ்,